விளம்பர விகிதங்களுக்கு :
மனேஜர்,
சத்தியவேத பாதுகாவலன்
பெரியதெரு,
யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு எழுதுக.

# சத்தியவேத பாதுகாவலன்

சந்தா விபரம்
வருடசந்தா
இலங்கை ரூபா 5-50
வெளிநாடுகள் „ 6-50

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA.
1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது.
REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.
Telephone: No. 300

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

85-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1960-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 13-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 40-ம் இலக்கம்

## 23-10-1960 மிஷன் ஞாயிறு

### விசுவாசப்பரப்புதல் திருச்சங்கத்தின் செயலாளர் மகாவந். பீற்றர் சிஜிஸ்மோந்தி ஆண்டகையவர்கள் விடுத்துள்ள சிறப்புச்செய்தி

கடந்தஆண்டிலே வேதபோதக நாடுகளில் நிகழ்ந்தசம்பவங்களால் இவ்வருடம் மிஷன்ஞாயிறுக்கென விடுக்கும்செய்தி கிறீஸ்தவரென்ற பெயருக்கு அருகதையுள்ள எல்லாருடையவும் கவனத்தையும், சேவையுணர்ச்சியையும் வேறெந்தக் காலத்தையும் விட அதிகமாக ஈர்க்கவல்லதா யிருக்கிறது.

நாளுக்குநாள் மாறிக்கொண்டே போகும் இந்தஉலகத்தில் திருச்சபை ஓய்வின்றித் தனதுவேதபோதகஅலுவலை நடத்திவருகின்றது. இன்றையஉலகில் மயக்கம் கொடுக்கும் வேகத்தில் மாற்றங்கள் ஏற்பட்டுவருகின்றன. இவ்வாறுமாற்றங்கள் ஏற்பட்டுவருகையில் விசுவாசிகளின் செபங்களாலும், பொருளுதவியாலும் ஏற்படக்கூடிய சக்தியையெல்லாம் திரட்டுவது அவசியமென்று திருச்சபை உணர்ந்திருக்கிறது.

திருச்சபையில் புதிதாகச் சேர்ந்த பல கிறீஸ்தவசமூகங்கள் மிகமுக்கியமான ஒருகட்டத்தை அடைந்துள்ளன. இத்தருணத்தில் காலதாமதம்செய்வதோ, செய்யவேண்டிய காரியத்தைச் செய்யாதுவிட்டுவிடுவதோ பயனற்றமுறைகளைக் கையாளுவதோ பலதலைமுறைகளில் பாதிக்கக்கூடிய கெடுதிகளை விளைக்கக்கூடும்.

இந்தப்புதிய கிறீஸ்துவசமூகங்கள் சிறந்தநிலையை எய்தக்கூடுமென்ற நம்பிக்கையிருக்கிறது.

இவ்வாண்டில் ஆசியாவிலும், ஆபிரிக்காவிலும்பிறந்த மேற்றிராணிமார்களைக் கருதினால்மார்களாக நியமித்ததாலும், ஏற்கனவே பெரும் அளவிலுள்ள சுதேசமேற்றிராணிமார்களின் எண்ணிக்கையை இன்னும் அதிகரித்திருப்பதாலும் பாப்பரசர் இந்தப்புதியகிறீஸ்தவ சமூகங்கள் மீது எவ்வளவு நம்பிக்கை வைத்துள்ளார் என்பதை மீண்டும் தெளிவுசெய்துள்ளார்.

ஆனால், இன்றைய உலகில் தூரம்என்பது வரவரக்குறுகிக் கொண்டே போவதாலும், வெவ்வேறு கருத்துக்களுக்கிடையே மோதல்கள் ஏற்படுவதாலும், புரட்சிக்கருத்துகள் தலையெடுத்து நல்ல கருத்துகளை அமுக்கிவிட முயலுவதாலும் இந்தப்புதிய கிறீஸ்தவ சமூகங்கள் சமாளிக்க வேண்டிய இக்கட்டுகள் அதிகரித்துள்ளன. அத்தோடு அவர்களுடைய தேவைகளும் பெருகியுள்ளன. இச்சந்தர்ப்பத்தில் திருச்சபை ஒவ்வொருநாட்டின் கலைப்பண்பையும், மனப்பான்மைகளையும், உயரிய கருத்துகளையும் சுத்திகரம்செய்து, கிறீஸ்துவில் தனக்கு உகந்ததாகச் செய்துகொள்ளக் கூடும் என்பதைப் புதிய கிறீஸ்தவசமூகங்கள் உலகிற்குக் காட்டவேண்டும். தங்களுடைய தேசியஉள்ளெழுச்சியைக் கண்டுணர்ந்து உலகிற்குப் புலப்படுத்தத் தீவிரஆவல் கொண்டுள்ள நாடுகளில் புதிய கிறீஸ்தவசமூகங்களின் உறுப்பினர்கள் பிறர்சிநேகத்துடனும், மன்னிக்கும் மனப்பான்மையுடனும், வீரத்தன்மையுடனும் தங்கள் சகோதரர்களுடன் ஒன்றித்து நாட்டின்முன்னேற்றத்திற்காக ஆக்கமுறையில் உழைக்க முன்வரவேண்டும்.

இந்தநெருக்கடியான காலத்தில் தத்தம்நாட்டில் சிறுபான்மையோராக இருக்கும் புதியகிறீஸ்தவ சமூகத்தினருக்குத் தங்கள் கிறீஸ்தவசகோதரர் அனைவருடையவும் உதவிமெத்தவும் அவசியம்என்பதை நீங்கள் எளிதில் உணர்ந்துகொள்ளக்கூடும்.

அவர்களுக்கும், அவர்களுடைய மேற்றிராணிமார்களுக்கும் தாழ்ச்சியுடனும், சுயநலங்கருதாத பிறர்சிநேகத்துடனும் தங்களுடையஆற்றல்களை வேதபோதக நாடுகளிலே சேவைசெய்வதில் ஈடுபடுத்த முன்வரும் மிஷனரிய குருமார், விரத்தர்கள், கன்னியர்

[தொடர்ச்சி 4-ம் பக்கம்]

## ருஷியா வெற்றி காணவில்லை

சோவியத்ருஷியாவிலே சமயத்தைஅழிப்பதில் கம்யூனிஸ்தர்கள் இன்னுமே வெற்றிகாணவில்லை என்பது கடந்தசிலமாதங்களிலே இரும்புத்திரையினூடாகக் கிடைத்திருக்கும்செய்திகளிலிருந்து தெரியவருகிறது. அதனால் பெரிதும்ஆத்திரங்கொண்ட இந்நாஸ்திகர்கள் ருஷியாமுழுவதிலும் சமயத்தை ஒருகைபார்க்கிறதென்று மற்றுமோர்தரம் கங்கணங்கட்டி எழுந்துள்ளார்கள். ருஷியாவிலே மக்களில்ஒருபாலார் இன்னுமே சமயநம்பிக்கையும், சமயானுட்டானமும் உடையவர்களாய் இருக்கிறார்களென்று நெடுங்காலமாகக் கருதப்பட்டுவந்தது. ஆனால்,இவர்கள் வயதுசென்றவர்கள் என்றமட்டிலே அவர்களைப்பற்றிக் கரிசனையெடுக்கப் படவில்லை. ஏனெனில், அவர்களோடு ருஷியாவில்சமயம் முற்றாகஒழிந்துவிடுமாகவே பொறுத்திருப்பதென்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால்,இன்று ருஷியஇளைஞர்கள் சமயத்தில் கரிசனையெடுத்து வருகிறார்களென்று ருஷியாவின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து செய்திகள் சமீபத்தில்வரலாயின. "சமயவிரோதஇயக்கம் இளைஞர்கள் மத்தியில் காணப்படவேண்டிய விருத்தியை அடைவதாயில்லை; அவர்களிடையே சமயநாட்டம் வளர்ந்துகொண்டு வருகின்றது; கம்யூனிஸத்தில் கதிப்படைந்த இளைஞர்கள்தானும் இன்னுமே சமயநம்பிக்கை உள்ளவர்களுடன் ஊடாடுவதாலே பாதிக்கப்படுகிறார்கள்; சமயகருமங்களுக்குப் பொறுப்பாயுள்ளசிலகம்யூனிஸ்த அதிகாரிகளும் குருமார்மட்டிலே இளக்காரமாகநடந்துகொள்ளும் அறிகுறிகள் காணப்படுகின்றன" என்பனவாக முறையீடுகள்பிறந்திருக்கின்றன.

## ஜசிந்தாவின் அபயக்குரல்

பாத்திமாபதியிலே சின்னஜஸிந்தா தனதுசகோதரன் பிரான்சீஸுடனும், மைத்துனி லூசியாவோடும் தேவதாயாரைக் காட்சியில்கண்டும், அத்திருத்தாயின் செய்தியைக் கேட்டுமிருந்தாள். கடைசியாக அவளின் அந்தியவேளை அண்மியது. குருவானவர் ஒருவர் அவளை மரணத்துக்கு ஆயத்தஞ்செய்தார். அதிகமாக அவளும் செபஞ்செய்தாள். ஈற்றிலே உரத்துப்பேச முடியாதவகையில் அத்துணை பெரிதும் பலவீனமுற்றாள். "குருமாருக்காக மன்றாடுங்கள்" என்றுமாத்திரம் காதுக்குள்இரகசியமாகச் சொல்லக்கூடியவளாய் இருந்தாள். வேதவிரோதிகள்எத்துணைபெரும் குரூரத்தனமாகக் குருமாரைஎதிர்த்துப் போராடினார்கள்என்பதை அவள்நினைவில் கொண்டுவரக் கூடியவளாயிருந்தாள். அவளுடையபாலியசீவியத்திலே அவளை இதுவெகுவாக நடுங்கச்செய்தது. ஒருசிலகுருமாருக்குமேல் அறியவோ அன்றேல்காணவோ அவள் இயலாதிருந்தாள். ஆனால்,சகலபதவிகளிலும்மகாதிவ்வியமான அப்பதவியின் மேன்மையையும், கடமைகளையும் அவள்நன்றாக விளங்கியிருந்தாள். அதனால் குருமாருக்காகமன்றாடவேண்டும்,அவர்களைக் கனப்படுத்தவேண்டுமென்றும் தங்களால் இயன்றளவிலே எந்தவிதத்திலும் அவர்களுக்குஉதவி செய்ய வேண்டுமென்றும் மக்களுக்கு ஞாபகமூட்ட விரும்பினாள்.

ஜஸிந்தா தனதுசகோதரன் பிரான்சீஸுடன் 1917-ம்ஆண்டிலே மூன்று இடைப்பிள்ளைகளுக்கும் பாத்திமாநாயகி காட்சியளித்த செம்மறியாடுகளின் மேய்ச்சல்தரையில் கட்டியெழுப்பப்பட்டுள்ள மகாதேவாலயத்தில் இளைப்பாறுகின்றாள். தற்போது உலகப்பிரசித்திபெற்றுள்ள அந்த இடத்தில் இருந்துகொண்டு சமீபமும்,தூரமுமான இடங்களிலிருந்து அதனைத்தரிசிக்கவரும் யாத்திரிகர்களுக்கெல்லாம் "குருமாருக்காக மன்றாடுங்கள்" என்று உலகத்துக்குப் பரிந்து பேசுகிறவளாகக் காணப்படுகின்றாள். "குருமாருக்காக மன்றாடுங்கள்." அவர்கள் செப உதவியை வேண்டி நிற்கின்றார்கள்.

## மாஷல் ரிற்றோவின் கம்யூனிஸ்த ஆட்சியிலே

கம்யூனிஸ்தஆட்சி நடைபெற்று வருவதும், மாஷல்ரிற்றோவைச் சர்வாதிகாரியாகக் கொண்டுள்ளதுமான யூகோசிலேவியாவில் வேதகலாபனை இன்னமும் தணியாமலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நூற்றுக்குமேற்பட்ட குருமார் இன்னமும் சிறைவாசஞ் செய்கின்றார்கள். குருவானவர் ஒருவர் பட்டாளசேவையில் இருக்கும்போது அந்தரங்கமாகத் திவ்வியபூசைநிறைவேற்றமுனைந்தால் அவர் சிறைத்தண்டனை விதிக்கப்படுகின்றார். குருமடத்து மாணவர்கள் வழமையாகக் கடற் படையிலே சேர்க்கப்படுகின்றார்கள். இவர்கள் தங்கள்மேற்றிராணிமாருடனும், திருச்சபைச் செல்வாக்குடனும் தொடர்புகொள்ளாவண்ணம் தூரமான இடங்களுக்கு அனுப்பிவைக்கப்படு

[தொடர்ச்சி 8-ம்பக்கம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாலையில் எங்கே போகிருன் ?

(முன்தொடர்ச்சி)

"பூலோகத்தில் உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கவேண்டாம். இங்கே அந்தும், துருவும் அரிக்கின்றது. திருடரும் கன்னமிட்டுத் திருடுகிருர்கள். ஆனல், பரலோகத்தில் உங்கள் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள். அங்கே அந்தும், துருவும் அரிக்கிறதுமில்லை. திருடர் அங்கே கன்னமிட்டுத் திருடுகிறதுமில்லை. ஏனெனில், உன்பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கேயே உன் இருதயம் இருக்கின்றது."

தான் வருடக்கணக்கிலே வாசித்திராத சுவிசேஷப்புத்தகத்தை முதன்முதலாக எடுத்துவிரித்து வாசித்த இந்த முதல்வசனங்கள் ஆபேல்தாத்தாவுக்குப் பெரும்அதிர்ச்சியை உண்டு பண்ணின. பூலோகத்தில் உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கவேண்டாம்... ஆனல், பரலோகத்தில் உங்கள் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்... உன்பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கேயே உன்இருதயம் இருக்கின்றது...

ஆம், இந்தவாக்கியங்கள் அவர்மனதில் பிரசண்டமாருதம் வீசியதுபோன்று பெருங்குழப்பத்தையும், கலக்கத்தையும் உண்டுபண்ணின. எனதுஉலக வாழ்க்கையில் நான்அருமையாகச் சேகரித்துவைத்துள்ள இந்தப்பொக்கிஷங்கள்— (தனதுமனையின் சுவர்களில் தொங்கும் பலவிதஅருமையான பொருட்களையும் சுற்றுமுற்றும் பார்க்கின்ருர்) வங்கிகளில் நான்போட்டுவைத்திருக்கும் பதினுயிரக்கணக்கான பவுண்கள்... பூலோகத்தில் உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கவேண்டாமாம்... ஆனல், பரலோகத்தில் உங்கள்பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கட்டுமாம்... உன்பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கேயே உன் இருதயமும் இருக்கின்றதாம்.

இந்தவாக்கியங்களால் அவருக்குஏற்பட்ட மனக்குழப்பம் அன்றிரவு அவருடைய நித்திரைக்கே பெருங்குழப்பத்தை உண்டுபண்ணிவிட்டது. அந்தப்பக்கமும், இந்தப்பக்கமுமாய்ப் புரண்டு புரண்டு படுத்தார். பிறசிந்தனைகளிலே புலனைச் செலுத்திப்பார்த்தார். ஒருதரம் படுக்கையை விட்டெழுந்து அறைமுழுவதும் அங்குமிங்குமாக உலாவிப்பார்த்தார். ஒன்றுமே பலனளிக்கவில்லை. "பூலோகத்தில் உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கவேண்டாம்... உன்பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உன் இருதயம் இருக்கின்றது." இந்தவாக்கியங்களை அவரால் மறக்கமுடியவில்லை. ஆமாம், பூதம் அடைகாத்தாற்போன்று இதுகாலவரை தனது பொக்கிஷங்களையெல்லாம் தனக்கும்பயன்படாது, பிறர்க்கும்பயன்படாது பொத்திவைத்துக் காத்துக்கொண்டிருந்த ஆபேல் தாத்தாவுக்கு இவ்வார்த்தைகள் கடுஞ்சோதனையை உண்டுபண்ணி அவரைக் களைக்கப்பிடித்துவிட்டது.

கடைசியாக அவைகளை மறந்துவிடத்தக்கதாய் அவர் ஒரு உபாயமெடுத்தார். சுவிசேஷத்தில் வேறு சிலவாக்கியங்களைக் கருத்தாகவாசித்தால் அவற்றைக்கொண்டு மூந்தியவாக்கியங்களை மறந்துவிடலாமெனக் கருதினர். கருதியதும் ஏதோஅபூர்வமான காரியம்ஒன்றைக் கண்டுபிடித்தவரைப்போல் உற்சாகமடைந்தவராய் அப்புத்தகத்தைத் திரும்பவும் கையிலெடுத்தார். கண்ணையும்மூடிக்கொண்டு நேரே கட்டிலில்போய்ச் சரிந்தார். புத்தகத்தைத் திறந்தார். திறந்த பக்கத்தில் கண்ட மேல்வசனங்களை ஆவலுடன் வாசித்தார். ஆனல், அவ்வசனங்களும் அவருக்குத் திருப்தியை அளிக்கவில்லை. மிகுந்த அங்கலாய்ப்பையும், கலக்கத்தையும் மீளவும்உண்டுபண்ணிவிட்டன. திகைத்தார், மலைத்தார், பதகளித்தார். ஏதோவேண்டுமென்றுதான்—இல்லை, தன்னைச் சோதிக்கவேண்டுமென்றுதான் இந்தச் சுவிசேஷவாக்கியங்கள் தனதுகண்முன் தென்பட்டனவோ எனச் சிந்தித்தார். இப்படி நடக்குமென்ருல் ஒருகாலும் இந்தப்புத்தகத்தைக் கையிலெடுத்திருக்கமாட்டேனேயென்று தனக்குள் சொல்லிக்கொண்டார்.

ஆபேல்தாத்தாவை இரண்டாம் முறையும் கலங்கச்செய்த அந்தத்திருவாக்கியங்கள் வருமாறு: "உங்களுக்கு உள்ளவைகளைவிற்றுப் பிச்சை கொடுங்கள். பழமைப்படாத பணப்பைகளையும், குறையாத பொக்கிஷத்தையும் பரலோகத்திலே உங்களுக்குச் சம்பாதித்துவையுங்கள், அங்கே திருடனும்அணுகான், பூச்சியும்அரிக்காது அதேனென்ருல் உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கேயே உங்கள் இருதயமும் இருக்கும்."

அடிமேல் அடியடித்தவாருகவே இந்த வாக்கியங்கள் அவருக்குப் பெரிதும் வருத்தத்தை உண்டுபண்ணின. இவைகளைப்பற்றிய சிந்தனையால் அர்த்தசாமமாகியும் அவருக்கு நித்திரையோ வரவில்லை.

(தொடரும்)



# பல தேசங்களில்

### ரோமைநகரிலே பாப்பரசரது நாணயங்களின்பாவனை

23-ம்அருளப்பபாப்பரசரின் உருவத்தைத்தாங்கிய நாணயங்கள் தற்போது ரோமைநகரிலும், இத்தாலியின் ஏனைய பகுதிகளிலும் பொதுப்பாவனையில் இருந்துவருகின்றன. பத்துலயர்வரையிலுள்ள அதிகம்குறைந்த விலைமதிப்புள்ள நாணயங்கள் உலோகக்கலவை கொண்டு செய்யப்பட்டன. 50முதல் 100லையர்வரை விலைமதிப்புள்ள நாணயங்கள் சுத்தஉருக்கால் செய்யப்பட்டுள்ளன. 500லையர்பெறுமதியான 30,000வெள்ளிநாணயங்களும், 1,000 லையர்பெறுமதியான சுமார்2,000தங்க நாணயங்களும் இருக்கின்றன. நாணயங்களைச் சேகரிப்பவர்களுக்கென்று புதியநாணயங்களின் பூரணமானசெற் ஒன்று 7,500லையராகவும், ஏனைய இனநாணயங்கள் செற்ஒன்று 1,500 லையராகவும் வழங்கப்படுகின்றன.

### மற்ருேர் அமெரிக்க செயற்கைக்கிரகம்

அமெரிக்கா சென்ற 5-ந்திகதி புதன்கிழமை வெற்றிகரமாக 500ருத்தல் நிறையுள்ள தகவல்தரும் "குறியர்–பி" எனும் செயற்கைக்கிரகத்தை வானவெளிக்கு அனுப்பியுள்ளது. இது நிமிடமொன்றிற்கு 37,000சொற்களை அனுப்பவும், திருப்பிப்பெறவும்கூடிய சக்திவாய்ந்தது. "குறியர்–பி" செயற்கைக்கிரகம் முதல்நாள் 4-ந்திகதிசெவ்வாய்க்கிழமை பிற்பகல் கனவரால் முனையிலிருந்து வானவெளிக்கு அனுப்பப்பட்டது. 51 அங்குலவிட்டமுள்ள இந்தக்கோளம் 105·07நிமிடங்களுக்கு ஒருமுறை பூமியை வலம்வருமென்று அமெரிக்க பாதுகாப்புபகுதி இதுபற்றி வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

— அமெரிக்கசெய்தி

### ஐக்கியஅமெரிக்க தேசமும் கத்தோலிக்கரின் பெருக்கமும்

அமெரிக்க கத்தோலிக்கசனத்தொகை பொதுச்சனத்தொகையைப்போல் இருமடங்கு வீதமாய்த் தீவிரமாக அதிகரித்துக்கொண்டுவருவதாய் டக்றர்டொனல்ட் பறெற் அறிக்கையிட்டிருக்கின்ருர். நியூயோக்நகரிலுள்ள போர்டாம்சர்வகலாசாலையிலே சமீபத்திலநடந்தேறிய அமெரிக்க சமூகசாஸ்திர வருடாந்தமகாநாட்டில் இவர் சமர்ப்பித்துள்ள அறிக்கையிலே 1950-ம், 59-ம்ஆண்டுகளுக்கிடையிலே அத்தேசகத்தோலிக்க சனத்தொகை 35·9சதவிகிதமும், பொதுச்சனத்தொகை 16·6சதவிகிதமும் அதிகரித்திருப்பதாகத் தெரிவித்திருக்கின்ருர். இந்தஏற்றத்தாழ்ச்சிக்குக்காரணம், கத்தோலிக்கரின் பிறப்புவிகிதம் மிகவும் அதிகரித்திருப்பதும், வளர்ந்தவர்கள் மனந்திரும்பி ஞானஸ்நானம்பெறுவது படிப்படியாக அதிகரித்துக்கொண்டு வருவதுமேயென்று அவர் தெரிவித்திருக்கின்ருர்.

### பரிசுத்தஸ்தானத்தினிடமாகப் பிரித்தானிய புதியதூதுவர்

பரிசுத்தஸ்தானத்தினிடமாகச் சமீபகாலம்வரை பிரித்தானிய இராசியதூதுவராயிருந்து காலஞ்சென்ற சேர் மாக்குஸ் செகிஅவர்களிடமாக நோர்வேயில் பிரித்தானியஸ்தானிகராய் இருந்துவருகின்ற சேர் பீற்றர் ஸ்காஜெற்அவர்கள் நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்ருர். முன்னர் இப்பதவிக்கு நியமனஞ்செய்யப்பெற்றிருந்தவர்களைப்போலவே இவரும் ஓர்கத்தோலிக்கர் அல்ல. 1923-ம்ஆண்டு வத்திக்கானிலே பிரித்தானிய இராசியதூதராலயம் ஸ்தாபிக்கப்பட்டதுமுதல் அதில்நியமனம் பெற்ற தூதுவர்கள் கத்தோலிக்கர் அல்லாதவர்களே. ஆனல், அதன் காரியதரிசிகள் நிரந்தரமாகக் கத்தோலிக்கராய் இருந்துவந்தார்கள். ஆயினும் முதலாவதுஉலகயுத்தம் நிகழ்ந்தகாலத்திலும், அதுமுடிந்தவுடனும் "விசேஷதூதர்" களாகப் பிரித்தானிய அரசாங்கம் கத்தோலிக்க தூதுவரையே அனுப்பிவைத்தது. இவர்களில் முதலாவதாகச் சேர்ஹென்றி ஹோவாட் அவர்களும், இரண்டாவதாகக் கவுண்ட் டே சாலிஸ்அவர்களும் அனுப்பப் பெற்றிருந்தனர். தற்போதைய புதிய தூதுவர் 1955-ம்ஆண்டுமுதல் நோர்வேயில் பிரித்தானிய ஸ்தானிகராய் இருந்துவருகின்ருர். இராசியசேவையில் இவர் நெடுங்காலமாக ஈடுபட்டுப் பிரஸ்தாபம்பெற்றுள்ளவர். 1929-ம் ஆண்டு தமது24-ம்வயதில் அதில் இவர்பிரவேசித்தார்.

சங். பிறதர்
எஸ். ஆசீர்வாதம், எஸ். எஸ். ஜே.
அவர்களின்

## தேகவியோகம்

சஞ்சூசையப்பர்சபைச் சந்நியாசரும், முல்லைத்தீவைத் தமது பிறப்பிடமாகக் கொண்டவருமான சங். பிறதர் எஸ். ஆசீர்வாதம், எஸ். எஸ். ஜே. அவர்கள் சிலதினங்களாக நோய்கண்டிருந்து சென்ற 4-10-60 செவ்வாய்க்கிழமை நண்பகல் பரமனடி சேரலாயினர். இறக்கும்போது இவருக்கு வயது 74. ஒரு துறவியாக இவர் 51 வருடம் வாழ்க்கை நடத்தியிருக்கின்ருர். இவர் துறவறவார்த்தைப்பாடு கொடுத்த அதே வருடாந்ததினத்தில்தானே மரணமடைந்தமை எவருக்குமே ஓர் அதிசயமாயிற்று. இவர் கொழும்புத்துறை, ஊர்காவற்றுறை, மன்னர், மட்டக்களப்பு ஆதியாம் இடங்களில் திருத்தொண்டாற்றிப் பலர் குருமாராகவும், துறவிகளாகவும், உலகவாழ்க்கையில் சிறந்தவர்களாகவும் ஆகுவதற்கு ஊக்கமும், ஆக்கமும் கொடுத்துவந்தார்.

மட்டக்களப்புக் கத்தோலிக்க அநாதர்கள்அச்சியந்திரசாலை அதிபாராக அதனைப்பொறுப்பேற்று நடாத்தியகாலத்தில் இவர் "கிறீஸ்தவன் கைத்துணை", "திருஇருதய வணக்கமாதம்", "அர்ச். யூட் ததேயு அப்போஸ்தலர் வாழ்க்கை வரலாறு" என்னும் நூல்களைத் தாமே இயற்றி அச்சிலிட்டு வெளியிடலானுர். சில துண்டுப் பிரசுரங்களையும் வெளியிட்டுள்ளார். தாம் மரணமடைவதற்குச் சிலதினங்களின்முன் பரிசுத்ததனத்தைப்பற்றிய சிறிய பிரசுரம் ஒன்றை அச்சேற்றத்தொடங்கினர். இவர் மரணமடைந்த அன்றுதினமே அதுவும் அச்சகத்திலிருந்து வெளியாகியது.

தாழ்மை, கீழ்ப்படிதல், வேலைப்பிரியம், பிறர்நேசம் முதலிய அரியகுணங்கள் இவரிடம் விளங்கின. சிரேஷ்டர்களது விருப்பறிந்து, அதைக் கட்டளைபோல்மதித்து நிறைவேற்றுவதில் பிரியங்கொண்டவர். வீண்நேரம் போக்காது நாள்முழுவதும் உழைத்தவர். கைப்பணிகள் பலவற்றில் கைதேர்ந்தவர்.

இவர் மாணித்த அன்று சாயந்தரம் இவரின் உடல் சந்நியாச உடைகள் தரிக்கப்பெற்று, அர்ச். தேவமாதாவின் ஆலயத்தில் வைக்கப்படவே, பள்ளிச்சிறுவர் முதல் முதியோர்வரை முறைமுறையாகச் சென்று அவரின் ஆன்மஇளைப்பாற்றிக்காகச் செபமாலை ஓதி வேண்டுதல் செய்தனர். அதிவண. கட்டளைக்குரவரால் ஒழுங்கு செய்யப்பட்டபடி, மறுநாட்காலை 4-30 மணி தொடங்கி 9 மணிவரை அரை அரை மணித்தியாலங்களுக்கொருதடவை பல குருமாரால் திவ்விய பூசைகள் நிறைவேற்றப் பட்டன. பலர் சமுகமளித்துத் திவ்விய விருந்தருந்தினர். இவரது சுற்றத்தார் பலர் முல்லைத்தீவிலிருந்து வந்தனர்.

பின்னர் அன்று சாயந்தரம் நான்கு மணியளவில் மகாவண. மேற்றிராசன பரிபாலனர் மொன்சிஞ்ஞோர் டீசா சுவாமியவர்களால் துக்கப்பாடற் பூசை நிறைவேறியது. அவ்வமயம் மேற்றிராசனத்தின் பல பாகங்களிலுமிருந்து குருப்பிரசாதிகளும், அர்ச். மிக்கேல் கல்லூரியைச்சேர்ந்த யேசுசபைக் குருமார் பலரும், கற்றன், கம்பளை, கல்முனையிலிருந்து வந்த சஞ்சூசையப்பர்சபைத் துறவிகள்பலரும், பலசபைகளைச்சேர்ந்த கன்னியர்களும், பட்டினத்துப் பெரியார்களும், பாடசாலைப்பிள்ளைகளும் ஆலயத்தில் நிறைந்திருந்தனர்.

திவ்வியபூசை முடிந்ததும் பிரேதம் ஊர்வலமாக ஆலயடிச்சோலைச் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்பட்டது. அங்கு இறுதிச்சடங்குகள் மேற்றிராசன பரிபாலன சுவாமியவர்களால் நடாத்தப்பெற்று நல்லடக்கம் செய்யப்பட்டது. இவரிடம் கல்வி கற்ருேர், உதவிபெற்ருேர், மற்றும்எல்லோரையும் அவரது ஆன்மசாந்திக்காக வேண்டிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிருேம். அனுதாபச்செய்திகள் அனுப்பியோருக்கும், மலர்வளையங்கள் அனுப்பியோருக்கும், சமுகம் கொடுத்தோருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவிக்கிருேம். பிரேதஅடக்க ஒழுங்குமுறைகளை ஞானச்சிறப்புடன் செய்துதவிய புளியந்தீவுக் கட்டளைக்குரவருக்குத் தனிநன்றி செலுத்துகிருேம்.

R. I. P.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னமலரின் அன்னை தந்தையர்

(முன்தொடர்ச்சி)

இசிதோர் நல்வழியில் நடந்தானுயினும் தான் விரும்பிய ஒரு மங்கையை வதுவைசெய்ய ஆவல்கொண்டான். அம்மங்கையின் குணுதிசயங்களை ஆழ்ந்துகருதாது, மேலெழுந்தவாரியாக அவளே தன்துணைவியாகத் தகுந்தவள் எனத் தீர்மானித்தான். தனது தம்பியின் தவறுனகருத்தைக்கண்டு கலங்கினுள் ஷீலி. அறிவுரைகள் பலவற்றை அடிக்கடி கடிதஉருவில்அனுப்பி, அவன்மனதைமாற்ற முயன்ருள். அவளின் கடிதங்கள் பல ஆழ்ந்த கருத்துகளையும் கொண்டன.

"எவ்விதமேனும் மணம்செய்து கொள்ள வேண்டும்என ஆசிக்கிருய். உன் அறிவு இப்போது, மயக்கமடைந்துளதுகண்டு யான் மிகவருந்துகிறேன். அழகும் அறிவும், அந்தஸ்தும் உன் அறிவை மயக்கிவிட்டன. இவ்விரண்டுமே நிலையற்றவை. அழியக் கூடியவை. ஆகவே, இவ்விருசிறப்புகளை மட்டும் அளவுகோலாகக்கொண்டு திருமணஞ்செய்வாயானுல் பின்னர் அதுபற்றி நீ வருந்தநேரிடும். கணவனைக் களிப்புறச்செய்யும் தன்மைகளையோ, அன்றேல் அவனுக்கு வேதனைகளைக்கொடுக்கக்கூடிய தன்மைகளையோ அவள் கொண்டிருக்கிருளா என ஆராய்வதில் நீ அக்கறைகொள்ளவில்லை. மின்னுவதெல்லாம் பொன்னல்ல என்பதை நீ அறிவாய். சிறந்த இல்லத்தரசிஎன வருங்காலத்தோர் கருதக்கூடிய மங்கையொருத்தி வீட்டுக்கடமைகளைக் களிப்புடன்செய்வாள். சோம்பலுக்கு இடங்கொடாள். துன்பங்களைக்கண்டு அஞ்சாள். ஆடையாபரணங்களில் தேவையான அளவு சிரத்தையேகாட்டுவாள். கணவனின் இன்பமே அவளது இலட்சியம். குடும்ப நலனுக்காகத் தன்னையே தியாகம்செய்யத்தயங்காள். தேவபக்தியிலும், நல்லொழுக்கவழியிலும் பிள்ளைகளைப்பயிற்ற அவள்அறிவாள். சுறுசுறுப்புடனும், தூய்மையுடனும் விளங்குவாள்.

"இத்தகைய இலட்சணங்களைக் கொண்ட ஒருபெண்ணை நீ ஆரம்பத்தில் காணும்போது அருவருப்புக்காட்டுவாய். உலகத்தார்பார்வையில் அவள் ஏளனமாக மதிக்கப்படுவாள். ஆயின் அறிவாற்றலும், அனுபவமும்கொண்டோர் அழகும், அந்தஸ்தும்நிரம்பிய பெண்களைவிட இம்மங்கையையே விரும்புவர். ஏனெனில், அவளே இலட்சியமனைவியாகத் தகுந்தவள். கொண்டான் மனங்களிக்கக் குழந்தைகளை நன்னெறியிற்பயிற்ற, அக்குடும்பம் இன்பத்தில்திளைக்க வழிசெய்வாள்."

அக்காளின் அறிவுரைகள் இசிதோரின்மயக்கத்தைத் தெளிவாக்கின. அவன் லீசிக்ஸ் நகரில் தன்தொழிலை ஆரம்பித்தான். ஷீலியின் கொள்கை கட்சிசைந்த மங்கையொருத்தியை மணஞ்செய்துகொண்டான். அவனது இல்லாள் இறைவனுக்குகந்தவள். அந்நகரின் கத்தோலிக்க சேவாவீரர்களில் தலையாயவள். இசிதோரின் இல்வாழ்வில் இன்பம்திளைத்தோட ஆரம்பித்தது.

## 6. இறைவனின் தினம்

மாட்டீனின் நகைவியாபாரம் நன்கு செழிப்புறத்தொடங்கியது. அவரது வர்த்தகநிலையம் தினசரி திரளான கொள்வனவுசெய்வோரைக் கண்டது. மாட்டீனின் கண்ணியமும், பெருந்தன்மையும் பெருந்தொகையானேரை அவரதுவாடிக்கையாளர்கள் ஆக்கியது. ஆயின், அவர் ஞாயிறுவாரங்களில் ஓய்வுநாளைத் தகுந்தமுறையாக அனுசரிக்கும்வண்ணம் தமது நிலையத்தைச் சாத்திவிடுவார்.

அயலிலுள்ள வர்த்தகதாபனங்கள் அனைத்திலும் ஞாயிறுதினமே வியாபாரம் அதிகமாகநடைபெறும் நாளாகும். நகரத்தில்வதியும் அதிகாரிகள் சிப்பந்திகள், தொழிலாளர் முதலியோருக்குச் சாவகாசமாகக் கடைத்தெருவுக்குப்போக ஞாயிற்றுக்கிழமையைத் தவிர வசதியானநாள் எங்கேகிடைக்கும்? கிராமங்களிலிருந்து கொள்வனவுசெய்ய நகருக்கு வருபவர்கட்கும் அதுவே தகுந்தநாளாகும். எனவே, ஞாயிற்றுக்கிழமைகளில்கடைத்தெருக்களெல்லாம் மக்கள்கூட்டத்தால்நிரம்பிவழியும்.

நகரத்திலும், கிராமத்திலும் ஏராளமான வாடிக்கையாளர்கள் மாட்டீனுக்குஉண்டு. அவர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் அவரின்வர்த்தக நிலையத்துக்கு வரும்போது அது சாத்தப்பட்டிருப்பதைக்கண்டு ஏமாற்றமடைவார்கள். அவர்கள்விரும்பின் அடுத்த தாபனங்களில் தங்கள் தேவைகளைப் பூர்த்திசெய்ய இடமுண்டு. ஆயின், அவர்கள் இது இறைவனின் தினம்; அவருக்குமட்டுமே வழிபாடுகள்செலுத்தப்படல் வேண்டும்என்ற அர்ச். ஆர்க்கின் அருளம்மாளுடைய வார்த்தைகளை நினைத்தவண்ணம் திரும்பிச்செல்வர்.

மாட்டீன் தாம்விற்பனைசெய்யும் வைரங்களைப்போல வைரமான நெஞ்சுடையவர். அவரது வர்த்தகநண்பர்கள் வர்த்தகநிலையத்தின் பின்வாயிலைத்திறந்து வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யும்படி ஆலோசனைகூறினர். ஆத்துமகுரவரோ ஞாயிறுபூசையின்பின்னர் சிலமணித்தியாலங்கட்கு நிலையத்தைத் திறந்து வர்த்தகம்செய்வதில் விக்கினம் எதுவுமில்லையெனத் தெரிவித்தார். வர்த்தகத்தைஇழப்பினும் இறைவனின் அரவணைப்பில் தம்மையும், தமது குடும்பத்தினரையும் பாதுகாப்பதொன்றே தமக்குப் போதுமானதுஎன மாட்டீன் நிர்த்தாட்சணியமாகக் கூறிவிட்டார். கூலியாளரின்வேதனங்களை ஒருபோதும் தாமதிக்கமாட்டார் மாட்டீன். "யாராவது உனக்குப்பணிவிடைசெய்யின் கூலியை உடன் செலுத்திவிடு; அவனதுகூலியின்பாரம் உன்னுடன் தங்க அனுமதியாதே" என்ற தோபியாஸ்ஆகம வார்த்தைகளை அவர் எப்போதாவதுஅசட்டைசெய்தவரல்லர்.

(தொடரும்)

# தாம் ஓர் கிறீஸ்துவர்தானு?

(முன்தொடர்ச்சி)

கனவிலும் எண்ணியிராதவிதமாய் மின்னிக்குமுறிக் கனகமழை பொழிந்தாற்போன்று சீமோனின் வாயிலிருந்து காத்திராதவகையில் சரமாரியாக உதிர்ந்த வீரகர்ச்சிதமொழிகள் செவியில்விழுந்ததே அவன்பெற்ருேர் மலைத்துப்போயினர். அதன்மேல் மிகுந்த பிரமிப் படைந்தவர்கள்போல் ஆச்சரிய வசத்தராய்ச் சிறிதுவேளை அசையாதிருந்தனர். பின்னர் அவன்வதனத்தை ஒருகால் உள்ளன்புபெருக உற்றுநோக்கினர். போர்ஒன்றிலே வெற்றிமாலை சூடப்போகும் ஒருவீரனின் வதனத்தைப்போன்று அதுவும்சோபிதமுற்று விளங்கக்கண்டனர்.

தமது மகிழ்ச்சிவெள்ளத்தை மனதில்கட்டுப்படுத்தும் வகையறியாத தந்தையானவர் ஆனந்தக்கண்ணீர்பெருக மைந்தனைவிழித்து, மகனே! இன்று உன்வீரமொழிகளை என்செவிகுளிரக் கேட்டேன்; உன்னைத் தம்முடைய செல்வமைந்தனுக — சிரேஷ்டபுதல்வனுகக் கண்டடைய உன் தந்தை என்ன தவம் ஆற்றினுரோ அறியேன்; மகனே, திடவிசுவாசமாயிரு; திடசித்தமாயிரு; அரசனுக்கு அஞ்சாதே; அவன் இடப்போகும் கொடியதண்டனைக்கு அஞ்சாதேயென்று நயமாக மொழிந்தார்

தாயும் தனயனைவிழித்து, எனது அருமருந்தன்ன செல்வமே, அன்று உன்னைப்பெற்றபொழுது உனது அன்னை எவ்வளவோ உவகையெய்தினுள்; ஆனுல், இன்று உன்வீரமொழிகளை என்சிந்தைகுளிரக் கேட்டபொழுதோ அதிலும் எத்தனையோமடங்கு பேருவகையெய்துகின்ருள்; ஆம், உனது அன்னை பெற்றது அரும்பேறே; என்செல்வமக்கள் மூவருமே வேதசாட்சிகளாகக் கிடைத்த பாக்கியமே பெரும்பாக்கியம்; மகனே, உன்தம்பி முந்தவழி நடந்துகாட்டினுன்; அவனைத் தொடர்ந்து உன்தங்கை வழிநடந்தாள்; இப்போது அவர்களைத்தொடர்ந்து நீ வழிநடந்து வேதசாட்சிமுடிபுனையப்போகின்ருய்; உன்னைப் பெற்ற அன்னைதந்தையரும் உன்னைப் பின்தொடரும்நாள் இன்னும் அதிகத் தூரத்திலில்லை; சந்தோஷமாகச் செல்வாய் மகனே என்று சொல்லி அவனை ஆசீர்வதித்தாள் அன்னை. அதன்மேல் மூவரும்எழுந்து இராப்போசனத்தை முடித்துக்கொண்டு வழமையானசெபங்களைச்சொல்லிவிட்டுப் படுக்கைக்குச் சென்று மறுதினம் நடக்கப்போவதைச் சிந்தித்துக்கொண்டு நித்திரை போயினுர்கள்.

நித்திரை போயுமென்ன? அம்மூவருள் எவருக்குமே அது நீடித்திருக்கவில்லை அவர்கள்கண்ட பயங்கரக்கனுக்கள் திடுக்காட்டமும், திகிலும் உண்டுபண்ணி அவர்களின்நித்திரையை அடிக்கடி கலைத்துக்கொண்டேயிருந்தன. அப்போதெல்லாம் அவர்கள் விழித்தெழுந்து மறுநாள்நிகழப்போவதையே சிந்தித்துக்கொண்டார்கள். சீமோன் விழித்தபோதெல்லாம் சாமக்கோழி கூவிக்கொண்டிருந்தது. அப்போதெல்லாம் சீமோன்பேதுருவை யேசுநாதர் நோக்கி: இந்த இராத்திரியிலே இருமுறைசேவல்கூவுமுன் நீ மும்முறை என்னைமறுதலிப்பாயென்று மெய்யாகவே உனக்குச்சொல்லுகிறேனென்று கூறிய வாக்கியம் அவன்ஞாபகத்தில் வந்துகொண்டிருந்தது. நீயும் நசரேனுவாகிய யேசுவோடுஇருந்தாய்; இவன் அவர்களில்ஒருவன்; மெய்யாகவே நீயும் அவர்களில் ஒருவனென்று சொல்லியபோதெல்லாம் நீங்கள்சொல்லுகிற அ[illegible] என்று சீமோன்பேதுரு திவ்விய[illegible] மறுதலித்தசம்பவமும் அவன்நினைவில் வராமலில்லை. ஆயினும்அவன் அந்த நினைவிற்கு இடங்கொடாது தேவதாயாரிலும் அர்ச். சூசையப்பரிலும் நம்பிக்கைவைத்து அவர்களின்உதவியை வேண்டிக்கொண்டான்.

கடைசியாகச் சேவல்கூவியது. பொழுதுபுலர்ந்தது. தீயஸ்பிரவும், அவர்பத்தினியும், புத்திரன்சீமோனும் படுக்கைவிட்டெழுந்தனர். காலைச் செபஞ்சொல்லிக் காலைக்கடன்களை முடித்தனர். காலைப்போசனம் செய்தனர். அதன்மேல் படைத்தலைவனுடையவும், அவன் துணைவருடையவும் வரவை அங்கலாய்ப்புடன் எதிர்பார்த்து அரண்மனையின் வெளிவாயில்கதவை நோக்கியபடியே இருந்தனர். மணி 9 அடித்தது, 10அடித்தது. உச்சிமத்தியானமாயிற்று. அவர்கள்இன்னுமே தலைகாட்டவில்லை. பின்னர்மணி 1, 2, 3, 4, 5என்று கழிந்துகொண்டே போனது. கடைசியாகப் பொழுதும் அஸ்தமித்துவிட்டது. படைத்தலைவனுடையவும், அவன் துணைவருடையவும் தலைக்கறுப்புத்தானும் அன்று காணப்படவில்லை.

(வளரும்)

## பாப்பரசர் வழிகாட்டுகின்ருர்

அருளப்பபாப்பரசர் அன்றுதிங்கட்கிழமை வழிகாட்டுகிறவர் ஒருவரின் கடமைகளை மேற்கொள்ளலாயினர். தரிசகர்களின் குழுஒன்றுக்கு அவர் காஸ்தெல் காந்தல்போவிலுள்ள தமது கோடைகாலமாளிகையைக் காண்பித்தபோது, சிமமாசன அறை, கருதினல்மார்திருச்சங்க மண்டபம்உட்பட அதில்அடங்கியுள்ள அதிகாரபூர்வமான உள்ளறைகளினூடாக அவர்களை அழைத்துச்சென்ருர். பின்னர் அம்மாளிகையின் சன்னல்களண்டை அழைத்துச்சென்று ரோமைநகரினதும், தூரமானகடலினதும், ஒலிம்பிக்விளையாட்டுகளின் போது தண்டுவலித்தலும், படகோட்டுதலும் நடைபெற்ற அல்பானோவாவியினதும் காட்சிகளை அவர்களுக்குக் காண்பித்தார்.

## பீரங்கிகள் கொண்டுசெய்த மாதாவின் திருச்சுரூபம்

பிரான்சிலே லெபூய்நகர் ஆசனக்கோவிலின் கோபுரஉச்சியில் 50 அடி உயரமான தேவமாதாவின் திருச்சுரூபம் ஸ்தாபிக்கப்பட்ட நூரும்ஆண்டின் ஞாபகார்த்த திவ்வியபூசை சமீபத்தில் நிறைவேறியபோது ஓர் குன்றின் உச்சியிலுள்ள இந்த ஆசனக்கோவிலை நோக்கிச்செல்லும் செங்குத்தான வீதிகளில் பெருந்திரளான மக்கள் சுழாம் வரிசையாக அணிவகுத்துநின்றன. இந்தச் சுரூபத்தைச் செய்வதற்கென்று கிறிமிய யுத்தத்திலே ருஷியர்களிடமிருந்துகைப்பற்றிய வெண்கலப்பீரங்கிகளை மூன்ருவதுநெப்போலியன் சக்கிரவர்த்தி உபகரித்திருந்தார்.

## பாப்பரசரும் ஆங்கிலபாஷையும்

தமதுகோடைகாலவாசஸ்தலமாகிய காஸ்தெல் காந்தல்போ மாளிகையில் அன்று 9,000யாத்திரிகர்களுக்கு அளிக்கப்பட்ட பேட்டி ஒன்றில் அருளப்பபாப்பரசர் முதன்முறையாக ஆங்கிலபாஷையில் பேசலாயினர். முந்தஅவர் இத்தாலிய பாஷையில் பேசிவிட்டுப் பின்னர்அதன்பொழிப்பைப் பிரான்ஸிய பாஷையிலும், அதைத்தொடர்ந்து ஆங்கிலபாஷையிலும் எடுத்துக்கூறினர். ஒருவருடகாலத்துக்குமேல் ஓர்ஐரிஷ்சாதிக் குருசிரேஷ்டரான வண. தோமஸ் றையன் சுவாமியாரிடம் அவர் ஆங்கிலம் கற்றுவருகின்ருர்.

* * *

● ஜப்பானிலே புத்தர்கள் கடந்த 1,400வருடங்களாகத் தங்கள்மத்தியில் இறந்தவர்கள்பேரால் "சகலஆத்துமாக்கள் தினம்" ஒன்றை அனுட்டித்து, அவர்களை ஞாபகப்படுத்தி வருகின்ருர்கள். இந்தத்தினம் ஆவணிமாதம் 15-ந்திகதியாகும். அன்றுதினம் அவர்கள் 'ஓ-பொன்'என்ற லாந்தர் நடனத்தைநடத்தி இறந்தவர்களை ஞாபகப்படுத்துகின்ருர்கள்.

● மேற்குவங்காள கவர்னர்உட்பட நடைபெற்ற சிற்றுண்டிஉபசாரணை ஒன்றிலே கருதினல்அகஜியானியன் ஆண்டகைஅவர்கள் அருளப்பபாப்பரசரிடமிருந்து தாம்கொண்டுவந்த பதக்கம்ஒன்றைக் கவர்னர்அவர்களுக்கு ஓருஞாபகார்த்தசின்னமாகச் சங்மானிக்கலாயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

**ஐப்பசி — 1960**

சனி. 15 அர்ச். அவிலா தெரேசம்மாள் [வெ]
ஞா. 16 பெந்தக்கோஸ்தின் பின் 19-ம் ஞாயிறு (அர்ச். எட்வீசம்மாள் ஞா.) (வி. ம.) [ப]
தி. 17 அர்ச். மார்கரீத் மரியா அலக்கொக் அம்மாள் [வெ]
செ. 18 அர்ச். லூக்காஸ் (வி. ம.) [சி]
பு. 19 அர்ச். அல்காந்தரா இராயப்பர் [வெ]
வி. 20 அர்ச். கான்சியுஸ் அருளப்பர் [வெ]
வெ. 21 காலதினம் (ஞாயிறுபூசை; அர்ச். கில்லாரியோன் ஞா.) அர்ச். ஊர்சலம்மாள் தோழர் [ப]
ச. 22 மரியாயின் சனி [வெ]

---

சத்திய வேத
# பாதுகாவலன்
1960-ம் ஆண்டு
ஐப்பசிமாதம் 13-ந் திகதி

---

வண. எஸ். ஜே. வேதநாயகம் சுவாமியவர்களின்

## தேகவியோகம்

நமது அச்சகத்தின் அதிபராகக் கடந்தோராண்டளவாய்க் கடமை பார்த்து வந்தவரான வண. எஸ். ஜே. வேதநாயகம்சுவாமியவர்கள் சென்ற9-ந்திகதி ஞாயிற்றுக் கிழமைமாலை 6-30மணியளவிலே மரணத்திரையில் மறைந்தாரென்னும் அமங்கலசெய்தியை மிகுந்த விசனத்துடன்தெரிவிக்கின்றோம். அன்றுகாலை வழமைப்பிரகாரம் மண்டைதீவு விசாரணைப்பங்கிற்குச்சென்று அங்கே இருதிவ்விய பூசைப்பலிகள் நிறைவேற்றிவிட்டுச் சுகசேமமாகத் திரும்பிய சுவாமியவர்கள் அன்றுபிற்பகல் 3-30மணியளவில் எதிர்பாராத பரிதாபகரமான விபத்துக்குள்ளாய் மரணமடைந்தாரென்று காத்திராதவிதமாக வெளிவந்த துயரசெய்தியானது எவர்க்குமே பெரும் அதிர்ச்சியையும் கவலையையும் தரலாயிற்று. மரிக்கும்போது இவருக்குவயது 60.

வண. சின்னப்பு யோசேவ் வேதநாயகம் சுவாமியவர்கள் யாழ்ப்பாணத் திருச்சபைக்குச் சிறப்புவாய்ந்த அநேககுருப்பிரசாதிகளை உவந்தளித்த அச்சுவேலிப்பதியிலே 1900-ம்ஆண்டு கார்த்திகைமாதம் 17-ந்திகதியன்றுபிறந்தார். இவர் அச்சுவேலி அர்ச். சூசையப்பர்கோவில் சக்கிறிஸ்தாமாக விளங்கியிருந்த திரு. எஸ். வஸ்தியாம்பிள்ளை அவர்களின் பௌத்திரர். திரு. வஸ்தியாம்பிள்ளை சின்னப்புஅவர்களின் புத்திரர். காலஞ்சென்ற வண. எஸ். ஆசீர்வாதம் சுவாமியவர்களுக்கும், பரிமேலர் எஸ். அருளானந்தம்அவர்களுக்கும் சகோதரமுறையானவர். இவர் வண. சுவாமி. ஞானப்பிரகாசர் அவர்களினதும், வண. ஆசீர்வாதம்சுவாமிகளினதும் அடிச்சுவடுகளைப்பின்பற்றிக் குருமடத்தில் சேர்ந்து, குருத்துவத்திற்குரிய வேதசாஸ்திரங்களைத் திறம்படக் கற்றுத் தேர்ந்து, 1926-ம்ஆண்டு ஆனிமாதம் 24-ந்திகதிகுருப்பட்டம்பெற்று 1926-ம் ஆண்டு மார்கழிமாதம் 21-ந்திகதியன்று அமலோற்பவ மரியநாயகி குருபரித்தியாகிகள்சபையில் ஒருவராகச்சேர்ந்து கொண்டார்.

சுவாமியவர்கள் குருப்பட்டம் பெற்றபின் இளவாலை, அநுராதபுரம், கரவெட்டி, நாரனட்டான், கரம்பன், மண்டைதீவு, சுண்டிக்குளி, மிருசுவில், ஊறணிமுதலாம் பலவிசாரணைப்பங்குகளிலும் திருத்தொண்டாற்றித் தாம் சென்ற இடங்களிலெல்லாம் தமதுஞானமக்களுக்குத் தம்மாலான இகபரநன்மைகளைச் செய்துவந்திருக்கின்றார். குறையெனத் தாம்கண்டதை நிவர்த்திசெய்வதிலும், தவறெனக்கண்டதைத் திருத்துவதிலும், சரியெனக்கண்டதைச் சாதித்துப் பூர்த்திசெய்வதிலும் தயங்காதசுபாவமுடைய சுவாமியவர்கள் தாம்அனுப்பப்பெற்றுச்சென்ற விசாரணைப் பங்குகளிலே கோவில்களைத்திருத்திப் புதுப்பித்தும், பாடசாலைகளை நவமாகக்கட்டுவித்தும், மற்றும்அநேக சீர்திருத்தங்களைச் செய்வித்தும் ஆங்காங்கு தமது அழியாத ஞாபகசின்னங்களை நிலைநாட்டிவந்திருக்கின்றார். இவர் ஆங்கிலம், பிரான்ஸியம், லத்தீன், கிறீக்முதலாம்பாஷைகளை நன்குபயின்றவர். கல்வித் திறமையும், காரியதிறமையும் வாய்ந்தவர். பூசைவஸ்திரங்களோ, பூசைப்புத்தகங்களோ, மற்றும்தமக்குரிய பொருட்களோ எதையுமே புனிதமாக — பக்குவமாகபேணிவைத்திருக்கும் குணமுடையவர். புத்தகங்கள், பத்திரிகைகளைக் கருத்தாகவாசிக்கும் இயல்புடையவர். அன்பர்களின் சுகசேமங்களை அனுதாபசிந்தையுடன் விசாரிக்கும் ஆர்வமுடையவர்.

சிலவருடங்காலங்களாக நோய்வாய்ப்பட்டிருந்த சுவாமியவர்கள் அந்நோய்காரணமாகச் சிலவேளை சினந்துபேசினலும் மற்றவர்கள் அதைஒருவாறு சமாளித்துவிடுவார்கள். சிலவாரங்களாக அவருடையபேச்சிலும், போக்கிலுமிருந்து அவர்விரைவிலே மரணத்தை எதிர்பார்ப்பவர் போல் காணப்படலாயினர். விபத்தின்போது யேசுவே, மாதாவேயென்றும், மரிக்குமுன் ஆண்டவரே, என்மேல்இரக்கமாயிரும், யேசுவே, மாதாவேயென்றும் உருக்கமாக அவர்கூறியமொழிகள் பக்கத்தில்நின்றோரையெல்லாம் மனமுருகச்செய்துவிட்டனவாம். விபத்துஏற்பட்டுச் சிறிதுவேளையில் அவருக்கு அவஸ்தைப் பூசுதல் அருளப்பட்டது. அதற்குள் சமீபமாகவிருந்த பிரபல டக்றர்ஒருவர் தருவிக்கப்பட்டார். அவருடைய ஆலோசனையின்பேரிலே அவரும் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லப்பட்டுத் தகுந்த சிகிச்சை செய்யப்பெற்றும் குணமுறுமற்போக அங்கேயே அவருடையஆன்மா அமைதியாக உடலைவிட்டுப் பிரியலாயிற்று.

மரித்தபின் சுவாமியவர்களின் புனிதவுடல் மேற்றிராசனமாளிகைக்குக் கொண்டுவரப்பட்டு, பூசைவஸ்திரங்கள் அணியப்பெற்று, மேற்றிராணியாண்டவரின் சிற்றாலயத்தில் வளர்த்தப்படவே, மக்கள் திரள்திரளாக வந்து சந்தித்து அவரதுஆன்மசாந்திக்காக மன்றாடியபடியே இருந்தார்கள். மறுநாள்திங்கட் கிழமைகாலை ஆசனக்கோவிலிலே பெருந்திரளானோர் சமுகமாக அதிவண. [illegible] சுவாமியவர்களால் பெரியதுக்கப் பாடற்பூசை நிறைவேறியது.

பின்னர் அன்று சாயந்தரம் 4மணிக்கு அழகியபேழையில் வைத்த அவரின்பூதஉடல் ஆசனக்கோவில் கொண்டுசென்று உயர் மேடையில் வைக்கப்பெற்றதும் மகாவந். மேற்றிராணியாண்டவர் அவர்கள் ஐம்பதுகுருமார்சமேதராய்த் துக்கசங்கீதங்கள் பாடி அந்திமதிருச்சடங்குகளை நிறைவேற்றிவைத்தார். அத்தருணம் கன்னியாஸ்திரிமாரும், குருமடத்துமாணவர்களும், ஆசிரிய கலாசாலை மாணவர்மாணவிகளும், பாடசாலைப்பிள்ளைகளும், சுவாமியவர்களின் இனசனரும், முன்னுள்பங்குக்கிறீஸ்தவர்களும், பிறருமாக மிகப்பெருந்தொகையானோர் ஆலயத்தில்குழுமியிருந்தார்கள். திருச்சடங்குகள்நிறைவேறியதும் பேழைவைக்கப்பெற்றவண்டியை நமதுஅச்சகத்தவரும், மற்றும்சுற்றத்தவரும் இழுத்துச்செல்ல, சமுகமாயிருந்தாரெல்லாம் பெரியஊர்வலமாக முன்செல்லச் சேமக்காலையை அடைந்து அங்கு மேற்றிராணியாண்டவர்அவர்கள் கடைசி ஆசீர்வாதம் கூறிநிற்கப் பிரலாபமத்தியில் அடக்கம்சிறப்பாக நடந்தேறியது.

தனது அருமைச்சகோதரரான சுவாமியவர்களை இழந்து ஆற்றொணுத் துன்புற்றுவாடும் சகோதரியோடும், பரிமேலர் அவர்களோடும், மற்றும்குரவர்கள் முதலாம் உறவினரோடும், அன்பர்களோடும் நாமும்அனுதாபப் படுகின்றோம்.



R. I. P.

---

## மிஷன் ஞாயிறு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள், இல்லறத்தார்கள் ஆகியோரின்சேவை எவ்வளவு அவசரமாயிருக்கிறது என்பதை நீங்கள் உணராதிருக்க முடியாது.

வேதபோதக நாடுகளுக்குச் சென்று உழைக்குமாறு உங்கள் நாட்டவர்களுக்குத் தேவ அழைத்தல் வரும்படியாகவும், வேதபோதகநாடுகளின் மக்களுக்கும், குருத்துவவாழ்க்கைக்கும், கன்னியர் விரத்தர் வாழ்க்கைக்குமான தேவ அழைத்தல் வரும்படியாகவும் வேண்டிக் கொள்ளுங்கள்.

பாப்பரசரின் வேதபோதக சபைகள் தங்கள்பணிகளை நிறைவேற்றுவதற்குஉதவியாகஇன்னு மதிகமாகப் பொருளுதவி செய்யுங்கள். வேதபோதக பணியைப்பற்றி அண்மையில் பரிசுத்த பிதாவிடுத்த நிருபத்தில், வேதபோதக நாடுகளிலுள்ள கிறீஸ்தவர்கள் தங்கள்பொறுப்பை உணர்ந்து செயலாற்றவேண்டும்; அதற்காக அவர்களைத்தயாராக்கும்படி அவர்களுக்கு நமது வேதத்தின்கொள்கைகள், ஆன்மார்த்தமுன்னேற்றம், சமூக சேவை ஆகியவற்றில் பயிற்சியளிக்கும் ஸ்தாபனங்களை நிறுவவேண்டும்என்று கேட்டுள்ளார். நாம்கொடுப்பதால் அடைகிறோம் என்பதை மறக்கவேண்

## ஐப்பசிமாதம்

**பொதுக்கருத்து:—** வேதகலாபனைவேளையில் பரிசுத்தகன்னிமரியாயின் மன்றாட்டினால் வெல்லமுடியாத மனவலியை விசுவாசிகள் அடையும்படியாக வேண்டிக்கொள்வது.

**வேதபோதககருத்து:—** வேதபோதகநாடுகளில் உபதேசிமார்களின் தொகையும், தரமும் உயரும்படியாக மன்றாடிக்கொள்வது.

---

### காலைக்காணிக்கைச் செபம்

யேசுவின் திருஇருதயமே, நாங்கள் கட்டிக்கொள்ளும் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும், தேவரீர்திருப்பீடத்தில் ஓயாமல் உம்மைத்தானே பலியாகஒப்புக்கொடுக்கும் சகல கருத்துகளுக்காகவும் அடியேன் இன்றுசெய்யும் செபங்களையும், கிரியைகளையும், படுந்துன்ப வருத்தங்களையும் அர்ச்சியசிட்ட கன்னிமரியாயின் மாசில்லாத இருதயத்தின்வழியாக, உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். விசேஷமாகச் சபையாருக்குக் குறிக்கப்பட்ட சகல கருத்துகளுக்காகவும், பரிசுத்த பாப்பரசர் இம்மாதத்துக்கென நியமித்த கருத்துகளுக்காகவும் அவைகளை ஒப்புக்கொடுக்கிறேன்.

---

காலங் கண்ட

## ஆங்கிலேய மடாதிபர்

ஐந்துபாப்புமாரை நேர்முகமாக அறிந்தவரும், இருஅர்ச்சியசிட்டவர்களுக்கு நல்லஅறிமுகமானவருமான அலோசியஸ் சிமித்மடாதிபர் அன்றுசனிக்கிழமை இங்கிலாந்திலே கோண்வாலிலுள்ள திருச்சிலுவைக் கன்னியாஸ்திரிமாரின் ஆஸ்பத்திரியில் தமது87-ம்வயதில் மரணமாயினர். 13-ம்சிங்கராய பாப்பானவர்முதல் இதுவரை திருச்சபையை ஆட்சிசெய்த ஐந்து பாப்புமாரையும் இவர்அறிவார். இவர்பிறந்து ஐந்துவருடங்களின் பின்னரே 13-ம் சிங்கராய பாப்பானவர் சிம்மாசனத்தில்ஏறினார். 12-ம்பத்திநாத பாப்பானவராலே அர்ச்சியசிட்டபட்டம் சூட்டப்பெற்ற அர்ச். பிரான்செஸ் கபிறினிஅம்மாளை இவர்நன்கறிவார். லிசியேபதியின் அர்ச். தெரேசம்மாள்பிறந்த அதேவருடத்திலேயே இவரும்பிறந்தார். அவள்மரணமடைந்த அதேவருடத்திலே இவர் ரோமாபுரியில் குருப்பட்டம்பெற்றார். 1957-ம் ஆண்டு தமதுகுருத்துவவைரயூபிலியைக் கொண்டாடினார்.

---

டாம். பலநாடுகளிலுள்ள கிறீஸ்தவர்கள் ஒன்றித்து வேதத்தைப் பரப்பும்பணியில் ஈடுபட்டால் தான் திருச்சபை தனதுகடமையை நிறைவேற்றக்கூடும்.

இத்தகையநிலைமை தீவிரமாக ஏற்படவேண்டும்என்ற ஆவலோடுதான்கருதினல்பூமஸோனி பியோந்திஆண்டகையவர்கள் திறமையுள்ள வேறொருவரிடம் தமதுஅலுவலை ஒப்படைத்து, நித்தியசம்பாவனையடைய மறுவுலகம் சென்றுவிட்டார்.

இரண்டாவது வத்திக்கான் பொதுச்சங்கம் கூடப்போகும் நாள் நெருங்கிவருகிறது. அதைப்பற்றி நினைக்கையில் நமதுஉள்ளங்கள் நம்பிக்கையால் நிறைந்துள்ளன.

அந்தமாபெரும் சங்கத்திற்காக அனைத்துலக கிறீஸ்துவர்களும் செய்யக்கூடிய சிறந்தமுஸ்தீப்பு யாது? உலகம் முழுவதும் தெய்வீக அரசாட்சியின் எல்லைப்பரப்புக்குள்வந்துசேர உழைப்பதேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதவிப்பணம்பெறும் பாடசாலைகளை அரசாங்கம் எடுப்பதை ஆட்சேபித்து

# திரு. டபிள்யு. தஹநாயக்கா பேசுகின்றார்

இவ்விதம் மூன்னாள் கல்விமந்திரி திரு. விஜயானந்தா தஹநாயக்கா அவர்கள் வெருவலைச் சந்தைமைதானத்திலே வெருவலைத்தொகுதியைச் சேர்ந்த கத்தோலிக்கர், புத்தர், முஸ்லீம்களின் எதிர்பேசுதல் கூட்டம் ஒன்றில் பேசியபோது கூறலாயினர். மேலும் அவர்பேசியது வருமாறு :

தனதுகணவர் கடைப்பிடித்த கொள்கைகளைக் கைவிடமாட்டேனென்றும், இலங்கைமக்களின் — விசேஷமாய்ச் சிறுபான்மைமக்களின் உரிமைகளை அவர்களுக்குவழங்க மறுக்கமாட்டேனென்றும் கொடுத்தவாக்குறுதிகளை இன்றையபிரதமர் மூன்றுமாதங்களில் மறந்துவிட்டார். இன்று பிரதமரும், அவரது மந்திரிசபையினரும் திரு. பண்டாரநாயக்காவின் கொள்கைகளுக்குப் பேச்சளவில்மாத்திரம மதிப்பளிக்கின்றனர். தனதுகணவருடைய அல்லாத— ஆனால்,கம்யூனிஸ்தர்களுடைய கொள்கைகளினால் வழிநடத்தப்பட்டு வருகின்றனர். இந்தக்கம்யூனிஸ்தர்கள் இலங்கையிலே கம்யூனிஸத்தை நிலைநாட்டுதற்கென்று நீண்டகாலத்தவணை போட்டிருக்கிறார்கள்.

“லேக்ஹவுஸ்,ரைம்ஸ்பத்திரிகைகளின் குழுக்கள் ஐக்கியதேசியக் கட்சியைப் பெருமுழக்கமாக ஆதரித்தபோதுஅவைகள் காண்பித்ததைப்போன்ற அதே விடாப்பிடியோடும், அபிமானத்தோடும் இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஆதரித்துவரக்கண்டு நான் வருந்துகின்றேன். அவைகள் தற்போதைய அரசாங்கத்தையிட்டு அச்சங்கொண்டுள்ளன. அதனால் அரசாங்கத்தின்கொள்கைகளை ஆதரிப்பனவாகிவிட்டன. எந்தவிதமான அச்சுறுத்தல்களும் காலித் தஹநாயக்காவை வாய்பேசாமல் தடுக்கமுடியாது. துணிகரமாய் இருக்கும்படியும், கூட்டங்களிலே தெரிவிக்கப்படுகின்ற மக்களின் கருத்துகளைப் பிரசுரிக்கும்படியும் பத்திரிகைகளுக்கு நான் மனுப்பண்ணுகிறேன்.

பாடசாலைகளை எடுப்பதாகிய அரசாங்கத்தின்கொள்கைபற்றிய பிரச்சினைக்கு இனித்திரும்புவேன். விரைவிலே தீர்க்கப்படவேண்டிய அவசிய பிரச்சினைகள் இருந்துவரும் ஒரு சந்தர்ப்பத்திலே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிஅரசாங்கம் கடும்வேகத்திலே உதவிப்பணம்பெறும் பாடசாலைகளை எடுக்க ஆயத்தப்பட்டுக் கொண்டிருக்கக்காண்பது முற்றுமே விநோதமாகும். தற்போதையஅரசாங்கம் காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்காவின் கொள்கைகளைப்பின்பற்ற விரும்பியுள்ளது. ஆனால்,காலஞ்சென்ற பிரதமர் உதவிப்பணம்பெறும்பாடசாலைகளை அரசாங்கமெடுப்பதற்கு யதார்த்தமாகவே எதிராயிருந்தார். உதவிப்பணம்பெறும் பாடசாலைகளை முகாமைக்காரர்கள் தாமாகவேமனங்கொண்டு கையளிக்கும்போதுதான் அவைகளை எடுக்கவேண்டும்; ஆனால், பலவந்தமாய் அல்லவென்று அவரின் மரணத்துக்குச் சிறிதுகாலத்தின்முன் கூடிய மந்திரிசபை தீர்மானித்தது. உதவிப்பணம்பெறும் பாடசாலைகளைப் பலவந்தஞ்செய்து தானெடுக்கப் போவதில்லையென்றும், வலியத்தரப்படும் பாடசாலைகளைமட்டும் தான் எடுப்பதென்றும் அழுத்தமாக அவர் தெரிவித்திருந்தார்.

அரசாங்க கல்வித்திட்டம் ஒன்று தங்களுக்கு உதவியாயிருக்கப் போகிறதென்பதைக் கருத்திற்கொள்ளவேண்டாமென்று புத்தசமயத்தவர்களை நானெச்சரிக்கின்றேன். அதற்கு மாறாகக் கத்தோலிக்கருக்குத் தீங்கிழைக்கச் சிலபேர்களால் செய்யப்படும் எத்தகையமுயற்சிகளும் உங்கள்சொந்தச்சவக்குழிகளைத் தோண்டுவதாகவே முடியும். ஏனெனில், காலகதியில் உங்கள்சொந்தப்பிள்ளைகளையும், உங்கள்சொந்தச்சமயத்தையுமே அது பாதிப்பதாயிருக்கும். சமயப்போட்டிப் பிரச்சினையைக்கிளப்புவதாலே சிங்கள சாகியத்தைப் பிரித்துவைக்கவும், பின்னர்கம்யூனிஸ்த சர்வாதிகாரம் ஒன்றைக் கொண்டுவந்துபுகுத்தவும் திட்டமிட்டுவருகின்ற கம்யூனிஸ்தர்களின்சூழ்ச்சிகளாலேயே இவையெல்லாம் நடைபெறுகின்றன. சர்வதேச கம்யூனிஸம் அத்துணை கபடதந்திரமாக நடத்திவரும் திருவிளையாடலாலே ஜனநாயகத்துடன் நெருக்கமாக இணைந்துள்ள இந்தநாடு இன்று கம்யூனிஸத்திற்குரியபாதையைச் சித்தஞ்செய்வதை எதிர்கொண்டிருக்கிறது.

**“இந்தநாட்டிலே இன்றுகேட்பது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் குரல் அன்று. ஆனால், கம்யூனிஸ்தகட்சியின் குரலேயாகும். கம்யூனிஸ்தகட்சியானது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின்வாயில் குடிபுகுந்துவிட்டது. சிலகாலமாகத் திபேத்திலும். கேரளாவிலும் சர்வதேசகம்யூனிஸத்தால் பகிரங்கமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் இலங்கையிலே இன்று அந்தரங்கமாக எடுக்கப்பட்டுவருகின்றன. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிஅரசாங்கம் கம்யூனிஸ்தபொறியில் அகப்பட்டிருக்கிறது. உதவிப்பணம்பெறும் பாடசாலைகளையும், பத்திரிகைகளையும் அரசாங்கம் எடுக்கவேண்டுமென்ற கேள்விபிறக்கக்காரணம், பின்புறமாக மறைந்துநிற்கும் கம்யூனிஸ்தர்களின் பலவந்தமான தூண்டுதலேயாகும்.’’**

தான்பிரதமராய்வந்த சிலமாதங்களுக்கிடையிலே திருமதிசிறிமா பண்டாரநாயக்கா தனதுகணவரின் கொள்கைகளை மறந்துவிட்டிருக்கக் கண்டு நான்மிகவும் வருந்துகிறேன். உதவிப்பணம்பெறும் பாடசாலைகளை எடுப்பதுபற்றி ஒன்றுமேபேசாத தனது சுயதேர்தல் விஞ்ஞாபனத்தில் இடப்பட்டிருந்த நிபந்தனைகளைத் தானும் அவர்மறந்துவிட்டார். தான் நல்லதென்று தெரிந்துகொண்டபாடசாலையிலே தனதுபிள்ளைகளைப் படிப்பிப்பதற்கான சுதந்திரத்தைக் கொண்டிருப்பதில் தான்அனுபவித்துள்ள பெற்றாரின்சிலாக்கியங்களை அவர் அலட்சியஞ்செய்திருக்கின்றார். ஆம், இன்று நாம்கேட்பது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் குரல்அன்று. ஆனால், பின்னால்நின்று பேரொலிசெய்கின்ற மஸ்கோவின்குரலே, கம்யூனிஸ்தர்களின் திட்டங்களுக்கிணங்கப் பாடசாலைகள் எடுக்கப்படின் சமீபஎதிர்காலத்தில் பாடசாலைகள் கல்விக்குரிய நிலையங்களாக இருக்கமாட்டா. ஆனால், கம்யூனிஸ்தநிலையங்களாகவே இருந்துவரும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் எதிலும் குறிப்பிட்டிராத ஒருகொள்கையை நிறைவேற்றத் திருமதிபண்டாரநாயக்காவுக்கு என்ன உரிமை இருக்கிறதென்று நான்கேட்கின்றேன். தேர்தல்விஞ்ஞாபனம் சொன்னதெல்லாம், கல்வியின் உள்ளடக்கம்பற்றியது ஒன்றும், உதவிப்பணம்பெறும் பாடசாலைகளின் எதிர்காலம்பற்றியது மற்றொன்றுமாக இருகம்மிஷன்களைத் தாங்கள் நியமனஞ்செய்வோம் என்பதே. (மேற்கோளாகஒன்றை வாசித்துக்காட்டிவிட்டு) நான் பிழையாக மேற்கோள் காட்டுகிறேனென்று அத்தாட்சிப்படுத்துமாறு எவருக்குமே சவால்விடுகின்றேன். பாடசாலைகளை எடுப்பதுபற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள பேச்சுஒன்றை — வெருவலை எம். பி. ஜனாப் ஐ. ஏ. காதின் அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச்சேர்ந்த அங்கத்தவர்எவராவதுஒருவரின் அல்லது திருமதி சிறிமாபண்டாரநாயக்காவின் பேச்சு ஒன்றை உதாரணமாக எடுத்துக்காட்டுமாறு யாவருக்குமே நான்சவால்விடுகின்றேன். திருமதிபண்டாரநாயக்கா தனதுதேர்தல் கூட்டங்களில் தான் நிகழ்த்திய பேச்சுகளிலே உதவிப்பணம்பெறும் பாடசாலைகளைப்பற்றியாதொன்றுமே சொல்லவில்லை. பாடசாலைகளை [illegible] யே பி[illegible]

இதைஅவர்கள் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தால் அரசாங்கம் இப்போது பெற்றிருப்பதில் குறைந்தபட்சம் இருபதுஸ்தாபனங்களை இழந்திருக்கும். பாடசாலைகளை எடுப்பது கத்தோலிக்கரை எதிர்த்துச் செய்யப்படுகின்ற ஒருபழிவாங்கும் செயலாகும். சிறுபான்மையினரான ஒருசமூகத்தைத் தண்டிப்பது அதிகம்குரூரத்தனமும், அவர்களின்உரிமைகளை அவர்களுக்கு மறுப்பது ஜனநாயகமற்ற ஒருஅபிநயமுமாகும்.

கல்விமந்திரி ஜனாப் பதியுதீன் மஹ்மூத்அவர்கள் வெங்காயம், மிளகாய் வியாபாரத்துடன் அல்ல, மனிதசாகியத்தோடுதான் தொடர்புகொள்ளுகிறாரென்பதை அவருக்குத்தெரிவிக்க விரும்புகிறேன். நட்டுவத்தைகளான தனதுமுன்னோர்கள் இலங்கையிலே குறித்தசிலபகுதிகளில் செய்துகொண்டதுபோல திருமதிபண்டாரநாயக்காவும் இலங்கையைத் தனது நிந்தகமாகச் செய்துகொள்ளமுடியாதென்று அவருக்குச்சொல்ல நான்விரும்புகிறேன்.

அதிகம் சமீபகாலத்திலே ஜனநாயகத்திலிருந்து விலகியசெயல்யாதெனில் கல்விமந்திரி தன்முன்பாக வந்துதோன்றும்படியாய்ப் பொலிஸ்அதிகாரிகளுக்குக் கட்டளைவிடுத்தமையேயாகும். பொலிஸ்காரர் எப்போது வித்தியாவிநோதர்கள் ஆயினர்? அவர்கள் ஏன் அழைக்கப்பட்டனர்? என்று நான் கேட்கிறேன். இந்தச்சோஷலிஸம் அதிகம் கேலிவிளையாட்டுமாதிரியான ஒரு சோஷலிஸமாய்இருக்கின்றதே. கடந்த காலங்களிலே ஒருபொலிஸ்காரனின் கடமை குற்றச்செயல்களை விசாரணை செய்வதே. பொலிஸ்கடமைகள்பற்றிய கைப்புத்தகத்திலே இப்புதியகடமை இப்போது சேர்க்கப்பட்டிருக்கிறது.

அரசாங்கம் பாடசாலைகளை எடுப்பதைத் தடுத்துவைக்கத் தங்கள் பலமெல்லாம் கொண்டமட்டும் எதிர்க்குமாறு பொதுமக்களை நான் தூண்டிக் கேட்கிறேன். எங்கள் உரிமைகளுக்காகப்போராடுவது ஜனநாயக நாடுஒன்றிலே குற்றமல்ல. நாங்கள் எந்தவிதமான தியாகங்களையும் செய்வதற்கு அஞ்சப்படாது.

உதவிப் பணம்பெறும் பாடசாலைகளை எடுப்பதைக்காட்டிலும் தீர்க்கவேண்டிய மிகவும் முக்கியமான பிரச்சினைகள் அரசாங்கத்துக்கு இருக்கின்றன. 5வயதுக்கும், 14வயதுக்கும் இடைப்பட்டவர்களாய்ப் பாடசாலைகளில்லாது 4,12,000 பிள்ளைகள் இருக்கிறார்கள். 2,00,000பேர் வேலையில்லாது இருக்கின்றார்கள். இந்தப்பிரச்சினைகள் தீர்க்கப்படாமலே இருந்துவருகின்றன. பாடசாலைகளை எடுப்பதாலே மேலதிகமாகச் செலவுசெய்யவேண்டிவராதென்று சொல்வது அபத்தமாகும். உதவிப்பணம்பெறும் சகலபாடசாலைகளும் எடுக்கப்படுமானால் அரசாங்கத்துக்கு மேலதிகமாக நான்கு கோடிரூபா தேவைப்படும்.

## லெனினின் தபால்முத்திரையில்

கம்யூனிஸத்தின்தந்தையான லெனின்—அதாவது விலாடிமிர் இலிச் உலயானே பிறந்த 90-வது ஆண்டுநிறைவை ஞாபகப்படுத்துமுகமாக ஆறுபுதியதபால்முத்திரைகளைப்பாவனைக்குவெளியிட்டபோது சோவியற்ருஷியாவின் சமயவிரோதபிரசாரம் தன்னைத்தானே ஆட்சேபித்துக்கொள்ளும் விதம் பகிரங்கமாக வெளியாயிற்று. இருபது கோபெக்நாணய பெறுமதியுடைய பச்சை, சிவப்பு, கருமைவர்ணமுள்ள இந்தத் தபால்முத்திரைகளிலே “சோவியற்இராச்சியத்தின் பிதாவான லெனின் பிள்ளைகளுக்கான ஒரு கிறிஸ்மஸ்விழாக் கொண்டாட்டத்திலே ஒரு ருஷிய பெண்பிள்ளையைக் கையிலேந்திப் பிடித்துக்கொண்டிருப்பதையும், கிறிஸ்மஸ்மரம்ஒன்று அழகுறச்சிங்காரிக்கப்பெற்று அவற்றில் காட்சியளிப்பதையும் சோவியற்தபால் நிர்வாகம் தெளிவாகக் காண்பித்திருக்கின்றது. ஆனால்,இற்றைக்குச் சிலமாதங்களின்முன்னரே சோவியற்அரசாங்கம் உலகத்துக்குஅனுப்பிய வானொலிச்செய்தியில் யேசுக்கிறீஸ்து என்றொருவர் ஒருபோதுமே இருந்ததில்லையென்றும், கிறிஸ்மஸ் என்பது முதலாளித்துவ ஏகாதிபத்தியவாதிகளால் ஆக்கப்பட்ட ஒரு வர்த்தக சூதாட்டமேயென்றும் தெரிவிக்கலாயிற்று.

**திரு. எஸ் எவ். அல்போன்சஸ், பி.ஏ.**

வதிரி,திருஇருதயகல்லூரி ஆசிரியர்களில் ஒருவரான திரு. எஸ். எவ். அல்போன்சஸ் அவர்கள் இந்தியாவிலே ஒறிஸாசர்வகலாசாலை பி. ஏ. பரீட்சையில் அரங்கேறியிருக்கின்றாரென அறிந்து சந்தோஷமானோம். இவர் ஆங்கிலத்திலும், தமிழிலும் பயிற்சிபெற்ற ஓர் ஆசிரியர்என்பது ஈண்டு குறிப்பிடற்பாலதாகும்.

### புதியஉலகின் முதல் அர்ச்சியசிட்டவர்

இற்றைக்கு 389 வருடங்களின் முன் அர்ச்சியசிட்டபட்டம் சூட்டப்பெற்றவளான அர்ச். றோஸம்மாள் தனது பிறந்தவிடத்திலே தனதுமுதற்கோவிலைத் தற்போது கொண்டிருக்கின்றாள். அவள்பேரால் அர்ப்பணஞ்செய்யப்பெற்ற லீமாநகரின் முதலாவதுகோவில் சென்றஆவணி மாதம் 30-ந்திகதியாகிய அவளுடையதிருநாளன்று கருதினல் குஷிங் ஆண்டவரால் திறந்து வைக்கப்படலாயிற்று. அர்ச். றோஸம்மாள் லீமாநகரிலே 1586-ம் ஆண்டுபிறந்து தனது 31-ம்வயதில் தனதுமரணம்வரை அங்குதானே வசித்திருந்தாள். புதிய உலகமென அறியப்படுகின்ற அமெரிக்காவின் முதலாவது அர்ச்சியசிட்டவள் இவளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளைஞர் பக்கம்

அன்புமிக்க இளைஞர்களே !

## நாட்டின் இன்றைய அல்லல்களொழிந்து அமைதிநிலவ நாம் செய்யவேண்டியதென்ன?

செல்வி மேரிரோசலீன் சூசைப்பிள்ளை

தேவபிரசைகளான இஸ்ருயேல்சனத்தை அவர்களின் அக்கிரமங்களின் நிமித்தம் தேவன் அழிக்கச் சித்தங்கொண்டபொழுது எரேமியாஸ் தீர்க்கதரிசி அவர்களுக்காகப் பரிந்துபேசினார். "நீ இவர்களுக்காக மன்றாடவேண்டாம்; நான் இவர்களைப் படைபஞ்சத்தினாலும், கொள்ளைநோயாலும் அழிக்கப்போகிறேன்" எனக்கூறிய தேவன்தாமே, "இடிப்பேன், அழிப்பேன்என நான் ஒரு சாதிக்கு விரோதமாகவும் ஒருஇராச்சியத்திற்கு விரோதமாகவும் சொன்னமாத்திரத்தில் அவர்கள் மனந்திரும்பினால் நானும் அவர்களைத் தண்டிக்கமாட்டேன்" என அத்தீர்க்கதரிசிமூலமாக அறிவித்திருக்கிறார்.

"உலகில் அநேகயுத்தங்களும் கட்சிப்பிரிவுகளும் உண்டாகும். உலகத்தவரின் பாவங்களுக்காக்கினையாகவே யுத்தங்கள் நடைபெறுகின்றன. மனிதர் மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பினால் தேவன்அவர்களுக்கு மன்னிப்புக்கொடுப்பார். இல்லாவிடில் ஆக்கினை வந்தேதீரும்" என்பது பாத்திமாவில் தேவதாயார் அறிவித்த செய்தியாகும்.

மேற்கூறியவற்றைக்கொண்டு நாம்விளங்கிக்கொள்ள வேண்டியதென்னவெனில், தேவன் நம்மைத் தண்டிக்கும்பொருட்டே என்றுமில்லாத விதமாய் இன்று நம்நாட்டில் இன, மத துவேஷங்களும், கட்சிப்பிரிவுகளும், அரசியல் மோதல்களும்எழும்பி மக்களைக்கலக்கி உருட்டவிட்டிருக்கிறார் என்பதுதான். நாட்டுமக்கள் என்றமுறையில் பொதுமக்களாகிய நாமெல்லோரும் இப்பிரச்சினைகளனைத்தும் சுமுகமானமுறையிற் தீர்க்கப்படல்வேண்டும் எனவிரும்புகிறோம். இது வரவேற்கத்தக்கதே; எனினும், நம்பேரிற்சுமந்த ஓர் பெரும் பொறுப்பும், கட்டாயமாக நாம் கையாளவேண்டியதுமான ஓர்வழியுமுண்டு. அதுயாதெனில் தவறானவழியில் செலுத்தப்படும் நம்வாழ்க்கைப் படகைத் திருப்பி அறநெறியும், ஆன்மசுபீட்சமும், இறையன்பும் இரண்டறக்கலந்துள்ள ஒளியின்பாதையில் செலுத்திச்சென்று தேவநீதியைச் சாந்திப்படுத்த முயற்சிப்பதேயாம்.

"மனிதர் மனஸ்தாபப்பட்டுத் தபம்செய்தால் தேவன்அவர்களை மன்னிப்பார். இல்லாவிடில் ஆக்கினை வந்தேதீரும்" என்னும்வாக்கியத்தைச் சிந்தையிலிருத்தி, எம்மால் இயன்றமட்டும் சீரியவாழ்வுநடத்தி இறைவனைச் சாந்திப்படுத்துவோமென இன்றே தீர்மானிப்போமாக!

பின்வரும் உறுதிப்பத்திரத்தைச் சொந்தஎழுத்தால் திருப்பியெழுதி, நிரப்பி 'இளைஞர் பக்கம்', அர்ச். அன்னம்மாள் கோவில், பாண்டியன் தாழ்வு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அனுப்புவோரின் நாமங்கள் இதற்குரிய இடாப்பில் பதியப்பெற்று, மிகவும் விரும்பத்தக்க முறையில் பிரயோகிக்கப்படும்.

### உறுதி வாக்கு

[பெயர்] ........................................ ஆகிய நான், உத்தமனாய்ச் சீவிக்க விரும்பிப் பண்ணும் வாக்கு.

1. என்னாலியன்றளவு திருச்சபையின் போதகங்களைக் கற்றுக் கொள்ள முயலுவேன்.

2 தாராளமான மனசுடன் அவற்றை அனுசரிப்பதில் வீரிய குணம் காண்பிப்பேன்.

இடம் : ........................ ஒப்பம் : ........................
பிறந்த திகதி :........................ ஞானஸ்நானத் திகதி : ..........
முதல்நன்மைத் திகதி :............ உறுதிபூசுதற் திகதி :..........

## இவர் யார்?

(நான் அறிந்தபத்துபிரான்சிஸ்கள் திருச்சபையின் அர்ச்சியசிட்டர்களாகத் திகழ்கின்றனர்.)

1. கைம்பெண்ணாக இருந்து கன்னியர்க்குக் கன்னிகாசபைஒன்றை ஆக்கிய பிரான்சிஸ் யார்?
— ரோமாபுரியின் அர்ச். பிரான்சிஸ்

2. ஆண்களுக்கு ஒருசந்நியாசசபையை ஆக்கியதுமன்றிப் பெண்களும் தரித்திரத்தைஉணரச்செய்தவரான பிரபலவணிகரின் மகன்யார்?
— அசிஸிநகர் அர்ச். பிரான்சிஸ்

3. மினவுதல்சபையை ஆக்கிய பிரான்சிஸ் யார்?
— அர்ச் பிரான்சிஸ் டி சேல்ஸ்

4. எட்டுப்பிள்ளைகளின் தந்தையாயிருந்து அவர்களை வாழுவழிபண்ணிவிட்டுச் சந்நியாசம்புகுந்த பிரான்சிஸ் யார்?
— அர்ச். பிரான்சிஸ் போஷியார்

5. உலக மெல்லாவற்றையும் ஆதாயமாக்கிக் கொண்டாலும்...... என்ற வசனத்தைக்கேட்டுச் சந்நியாசம்பூண்ட பிரான்சிஸ் யார்?
— அர்ச். பிரான்சிஸ் சவேரியார்

6. மேற்றிராணியாராக இருந்த பிரான்சிஸ் யார்?
— அர்ச். பிரான்சிஸ் றெஜிஸ்.

7. அமெரிக்கநாட்டில் தேவ தொண்டாற்றிய பெண்மணியான பிரான்சிஸ் யார்?
— அர்ச். பிரான்சிஸ் கபிறினி

8 பிழையான கடிதத்தினால் சந்நியாச சீவியத்தைத்தெரிந்து அச்சபையின் உதவிஸ்தாபகரான பிரான்சிஸ் யார்?
— அர்ச். பிரான்சிஸ் கராசிலோ.

9. வனவாசியாய் ஐந்துவருடம் சீவித்தபிறகு [illegible] கடைசிச்சபை என்ற சந்நியாசசபையை ஸ்தாபித்த பிரான்சிஸ் யார்?
— அர்ச்.பிரான்சிஸ் அவ் போலா.

10. பெருநாட்டு அமெரிக்க இந்தியரின் போதகரான பிரான்சிஸ் யார்?
— அர்ச். பிரான்சிஸ் சுலோனு வெலறிசியா லியோன்

# பிரிந்தவர் கூடினர்

(செல்வி லூட்ஸ் அருளானந்தம்)

(முன் தொடர்ச்சி)

அடுத்ததினம் எற்மன் அமலநாயகியை நோக்கி: "எனதருமை மகளே! நீ கன்னியர்மடம்செல்ல ஆசிப்பது நல்லகாரியந்தான். ஆனால், இரண்டு மூன்று பிள்ளைகள் இருப்பவர்கள் ஒருவரை அனுப்பலாம். ஆனால், ஒரேபிள்ளையையுடையநாம் எப்படி உன்னை அனுப்பலாம். உன் அருமை அண்ணனையிழந்து துன்புறும் இவ்வேளையில் உன்னுடைய ஆறுதலால் தான் நாம் மனச்சாந்தியடையலாம். என் வாழ்வுபூராவும் உன்னை இன்பமுடன் வாழவைப்பதில் செலவிட நான் எண்ணியிருக்கும்போது ஆயுள் பரியந்தம் உன்பிரிவால் கலங்கியழ வைத்துவிட்டுக்கன்னியர்மடம்செல்லாதேமகளே" என எற்மன் அன்புமொழி கூறினார், இதைக்கேட்ட அமலநாயகி கவலையுடன் தந்தையை நோக்கி: "எனதருமையப்பா! உங்களருமைப் புதல்வியாக நானிருப்பது மெய்தான். ஆனால், உங்களைவிட அதிகமாகநேசிக்கும் தேவனிற்குத் தொண்டுசெய்வது எவ்வளவோ மேன்மையுடையதாகும். இவ்வுலக இன்ப சுகபோகமெல்லாம் அழிவிற்குரியவை. ஆனால், நாம் தேவனிற்காகச் செய்வனயாவும் அழிவற்ற இன்பத்தைத் தரவல்லன. ஆகையினாலே என்ஆவலிற்குத் தடைவிதிக்காது அன்புமுத்தம் தந்து என்னை மடத்திற்கு அனுப்பிவையுங்கள்" எனக்கூறினாள்.

அமலநாயகியின் பதிலைச் செவிமடுத்தஎற்மன் மிகுந்தசீற்றத்துடன் தன்புதல்வியை நோக்கி: "அமலநாயகி! பதினேழாண்டுகளாக உன்னை அன்புடன்நேசித்த தந்தையின் சொற்கேளாத நீயும்ஒரு பிள்ளையா? இனி நான்உன் தந்தையல்ல; நீயும் என் பிள்ளையல்லஎன்பதை மனதில் வைத்துக்கொள். நீ என்றைக்கு மடத்திற்குப் போகிறாயோ அன்றைக்கே நான் நாஸ்திகமறையில் சேர்ந்துவிடுவேன். பிள்ளைகளில்லாத எனக்கு என்ன இறைவழிபாடு. ஒன்றும் வேண்டியதில்லை. இதுவே நான் உனக்குக் கூறக்கூடிய இறுதிமொழிகள்" எனப் பகர்ந்தார்

தந்தையின் கடுஞ்சொற்கேட்ட அமலநாயகி ஒருகணம் திகைத்தாள். மறுகணம் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு அடுத்ததினம் மடம் செல்வதற்கு ஆடையணிகளை ஆயத்தப்படுத்தினாள். அதன்பிறகு ஆலயம்சென்று திவ்வியபூசைப்பலிகண்டு மரியன்னையிடம் தன்கவலைகளையெல்லாம் கண்ணீருடன் எடுத்துரைத்துவிட்டு ஆறுத்துயருடன் தந்தையின்றித் தனியே மடத்தையடைந்தாள்.

எற்மன் அமலநாயகி சென்றதினமே தன்புதல்வி எங்கோஇறந்துவிட்டதாகப் பத்திரிகையில் விளம்பரப்படுத்திவிட்டு அன்றைக்கே நாஸ்திகமறையில் சேர்ந்துவிட்டான். அன்புக்கணவனின்றி, அருமைப் புதல்வியின்றித் தன்னந்தனியே இல்லத்திலிருந்துகொண்டு அந்திசந்தி ஆலயம்சென்று தன்கணவனையும், பிள்ளைகளையும் ஒன்றுசேர்க்கும்படி அயராதுவேண்டினாள். ஐந்துவருடங்களாக எலன் தன்னந்தனியே வாழ்க்கை நடத்தினாள். அத்தனை வருடகாலமும் அன்னைமரியிடம் தன் குறையிரந்து எல்லோரையும் ஒன்றுசேர்க்கும்படி வேண்டினாள்.

கப்பலிலிருந்துயாரோசிறுவருடன் கூறிச்சென்ற பாலியன் அமலதாசன் ஒருதனவந்தரின் இல்லத்தில் மிகவும் செல்லமாக வளர்க்கப்பட்டு ஈற்றில் ஓர் குருவாகியிருந்தார். அவர் தன் அன்னைதந்தையரையும், அன்புத்தங்கையையும் காணவேண்டுமென ஆவல்கொண்டார். இருபத்திநான்காண்டுகளாகத் தன் குடும்பத்தினரை எண்ணிஎண்ணிக் கவலைகொண்டார். ஈற்றில் ஓர்பத்திரிகையில் தமது தங்கை இறந்துவிட்டதாக வாசித்ததும் மிகுந்தகவலைகொண்டார். அன்றுமுதல் அவளிற்காக மன்றாடிவந்தார். அச்சமயம் அவ்வூர் மேற்றிராணியாரின் உத்தரவுபெற்றுத் தமது தாய்நாடுசெல்ல ஆயத்தமாகினார்.

பத்திரிகையில் அமலதாசன் குருவானவர் தம்நாடு திரும்பி வருகிறார் என்ற செய்தியைக் கண்ட எலன் களிப்படைந்தாள். ஆயினும் அவ்வரிய மகிழ்ச்சியான சந்தர்ப்பத்தில் பங்குபற்றத் தன்கணவனும் மகளும் கொடுத்துவைக்கவில்லையே எனக் கவலைகொண்டு அன்னைமரியிடம் உருக்கமுடன் ஜெபித்தாள். அவளுடைய ஜெபத்தின் பலனால் எற்மன் மனந்திரும்பித் திரும்பவும் பழைய உத்தமராக மாறினார். அத்துடன் காணமற்போனமைந்தன் குருவாக வருவதையிட்டு உள்ளம்பூரித்தார். தன்புதல்வரின் வரவிற்காகக் காத்திருந்தார். அமலதாசனின் வரவேற்புக்கொண்டாட்டத்தில் பங்குபற்றும்படி அநேகருக்கு அழைப்புப்பத்திரம் அனுப்பினார். அமலதாசனின் வரவையிட்டு எற்மனின் இல்லம் புதுமைப்பொலிவுடன் விளங்கியது.

மாசித்திங்கள் இரண்டாம் நாள். அமலதாசன்குருவானவர் மிகுந்த ஆரவாரத்துடன் மக்கள் பெருந்திரளாக முன்னேசெல்ல மேளதாள வாத்தியங்களுடன் தமது ஊர்க்கோவிலில் திவ்வியபூசைப்பலிநிறைவேற்றினார். பூசைமுடிந்ததும் தம்ஆசீரைப் பெற்றோருக் கருளுவதற்காக அவர்களை அழைத்தார். அச்சமயம் கன்னியர் உடையுடன் அமலநாயகியும் சென்றா. இறந்துவிட்டாளென எண்ணியிருந்த தங்கையைக்கண்டதும் குருவானவர் திகைத்தார். ஈற்றில் ஆசீரை அருளியதும் வெளியே சென்று அன்னையிடம் தம்தங்கையைப்பற்றியும், அவர்களின் வாழ்க்கைவரலாறுகளையும் கேட்டறிந்தார். பின்பு தமது வாழ்க்கையைப் பற்றி எடுத்துரைத்தார். அதன்பின்னர் எற்மன்குடும்பத்தினர் ஒருங்குகூடிப் பல்லாண்டுகளாகப் பிரிந்துவாழ்ந்த தம்குடும்பத்தினரை ஒன்றுசேர்த்த அமலஅன்னைக்குத் தங்கள் அகம் நிறைந்த நன்றியறிதலை உவகையுடன் சமர்ப்பித்தனர்.

## அறிவுச் சுடர்

- வஞ்சகன் நல்வார்த்தை உரைத்திடினும், அந்நல்வார்த்தை தன் குணம் மாறும்.
- ஓடுகிறநீரில்விழுந்தகட்டை அதே வழி இழுத்துச்செல்லப் படுகிறது போல, இறைவன் துணையற்ற ஆத்துமம் புண்ணியத்தைச் செய்யச் சக்தியற்றதாய்த் தீயவழியே இழுத்துச் செல்லப்படும்.
- பேச்சை அளந்துபேசு, அல்லது அது உன்னை அளக்கும்.
- கடமையைச் செய்தால், உரிமை தானே பின்தொடரும்
- ஞான இன்பத்தில் செய்யும் புண்ணியத்தைவிட, ஞானவரட்சியும், சோதனையும் உள்ள நேரத்தில் செய்யப்படும் புண்ணியத்திற்கே அதிகம் பலன் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்



அன்புத் தம்பி, தங்கையரே!

இம்முறை நாம் நடாத்திய "சிறுவர் தொடர்கதைப் போட்டி"யில் முதற்பரிசைச் செல்வன் போல் அந்தோனி பெறுகிறார். ஒரேயொரு கதைமாத்திரம் தொடர்கதைக்குரிய அம்சங்களை அடக்கியிருந்ததால் அவருக்கு மட்டுமே பரிசு வழங்குகிறோம். மற்றவர்களுடைய முயற்சியை நாம் பாராட்டுகின்றோம். முயற்சி பயன்தரும். முயன்றால் அடுத்த முறை வெற்றி பெறலாம் அல்லவா?

செல்வன் போல் அந்தோனி, கற்றன் அர்ச். யோண்பொஸ்கோ கல்லூரியில் படிக்கிறார். அடிக்கடி கவிதைகளும், கட்டுரைகளும் பாலர்பக்கத்தில் எழுதிவருகிறார். இவர் சென்ற 10-9-60 இல் கொண்டாடப்பட்ட அகிலஇலங்கை இலக்கியதினத்தில் கற்றன் நகரசபையினர் நடாத்திய பொதுக் 'கவிதைப்போட்டி'யில் முதற்பரிசு பெற்றிருக்கிறார். பாலர்பக்க நேயர்கள் சார்பாக அவர்பெற்ற வெற்றிக்கு எமது பாராட்டு. அவரது முயற்சி வளர்க!

உங்கள்அன்புள்ள அண்ணா

## எப்பொழுதும் செபிப்பது எங்ஙனம்?

இறைவனோடு மனம்கொண்டு உரையாடுவதே செபம். பொதுவாக நாங்கள் எப்போது செபிக்கிறோம்? காலை, மாலை, பலிபூசைநேரம், திருமணித்தியாலம் முதலிய வேளைகளிலேயே செபிக்கிறோம். மற்றப்படி கடவுளை ஒருபுறம் கைவிட்டு நாம் மறுபக்கமாக எமது வாழ்க்கையை நடத்துகிறோம்.

இது கிறிஸ்தவ சீவியமுமல்ல, செபிக்கும் முறையுமல்ல. நமது வாழ்க்கையை — ஏன்? ஒவ்வொரு கிரிகையையும் தேவனுடன் ஒன்றித்து அவருக்காகவே செய்துமுடித்தால் எப்பொழுதும் செபிப்பது போல்ஆகாதா? மனவல்லயச்செபம் நம்மைத் தேவனுடன் பிணைக்கும் காந்தக்கருவியாகும். காலை நித்திரை விட்டெழுந்த நேரம் தொடக்கம் மாலை கண்ணுறங்கும்வரை அடிக்கடி மனவல்லயச் செபமூலம் ஆண்டவருடன் சல்லாபிக்க முடியாதா?

நடக்கும்போதும், கதைக்கும் போதும், சிரிக்கும்போதும், வேலை செய்யும்போதும், படிக்கும்போதும், ஏன்? விளையாடும்போது தானும் சிறுசிறு மனவல்லயச் செபங்களைச் சொல்லி ஆண்டவருடன் ஒன்றிக்க முடியாதா?

இப்படி ஆண்டவரை அடிக்கடி மனதில் நினைப்பதும், சின்னஞ்சிறு செபங்களைச் செபிப்பதும் செபமாகாதா? தேவ சிநேகத்தின் கொடுமுடியைப் போய்ச்சேரக் குறுக்கு வழி மனவல்லயச் செபம் சொல்லி அடிக்கடி ஆண்டவருடன் ஒன்றிப்பதே.

ஓர் ஏழைச் சிறுமி இப்படியான சல்லாபத்தில் சுவைகண்டாள். இவளுடைய தினசரி வேலை கூட்டுவதும், கழுவுவதும், சமைப்பதும்தான். இப்படியானவேலைகள் மத்தியில் எப்படிச் செபித்தாள் தெரியுமா? பட்டு உடுத்திக் கோவிலுக்குப்போக அவளுக்கு நேரம்கிடையாது. முழந்தாளிட்டுச் செபமாலை சொல்ல எசமாட்டிக்குப் பயம். அப்படி இருக்கவும் பெரிய புண்ணியவதியானாள். எப்படி? பாத்திரங்களைக் கழுவும்போது, "என் நேச யேசுவே! இப்பாத்திரத்தை நான் எவ்வளவு துப்பரவாய்க் கழுவுகிறேனோ அப்படியே என் ஆத்துமத்தையும் மாசு மறுவின்றி உமது திரு இரத்தத்தால் கழுவியருளும்" என்றுவேண்டினாள். அப்படியே கூட்டும்போதும், துப்பரவு செய்யும்போதும் அப்படியே தன் ஆத்துமத்தையும் மேலெழுப்பித் "தெய்வமே! இவ்வண்ணமே என் ஆத்துமத்தில் உள்ள கஞ்சல் குப்பையாகிய பாவ நாட்டங்களைக் கூட்டித்தள்ளும்" என்றாள். நெருப்பு மூட்டும்போதும் என்னசொல்வாள் தெரியுமா? "என் நேச யேசுவே! என் ஆத்துமத்தில் தேவ சிநேக நெருப்பை மூட்டியருளும்" என்பாள். இச்சிறுமியின் பக்திவேகமான மன்றாட்டை எமது அன்பரான திவ்விய யேசு கேளாமல் விடுவாரா? கட்டாயம் கேட்டருளுவார். ஏனெனில், அவர் தேடும் ஆத்துமம் இத்தகையதே.

இச்சிறுமியைப்போல் நாங்களும் ஏன் அடிக்கடி செபிக்கக்கூடாது? நாங்கள் செய்யும் வேலைகளையும், படிக்கும் பாடங்களையும், விடும் ஒவ்வொரு மூச்சையும் ஆண்டவரின் நேசத்துக்காக ஒப்புக்கொடுக்கக் கூடாதா? இவ்வண்ணம் செய்வதே எப்பொழுதும் செபிப்பதாகும்.

— ஜெசி பத்திநாதன்

### அண்ணாவின் பதில்

செல்வி மேரி நீற்று! உமது கட்டுரை கிடைத்தது. ஆனால், அவ்விடயம் 21-1-60-இல் வெளியான 'பாதுகாவல'னில் மரியாயின் மைந்தன் என்ற தலையங்கத்துடன் பிரசுரிக்கப்பட்டுவிட்டது.

### பிழை திருத்தம்

சென்றவாரம் வெளியான "அர்ச். அந்தோனி கிளாறற்" என்னும் கட்டுரையிலே 1350-இல் 11-ம் பத்திநாதர் அர்ச். அந்தோனி கிளாறற்றைக் கியூபாதீவின் அதிமேற்றிராணியாராக நியமித்தார் என்பதை 1850-ம் ஆண்டு 9-ம் பத்திநாதர் இவரைக் கியூபாதீவின் அதிமேற்றிராணியாராக நியமித்தார் எனத் திருத்திக்கொள்ளவும்.

## அமெரிக்க சிறுவர்கழகஇயக்க நூறுவதுஆண்டு பூர்த்தி

### விசேட தபால் முத்திரை வெளியீடு

அமெரிக்க தபால்பகுதி நிகழும் ஐப்பசிமாதம் 18-ம் திகதி அமெரிக்க சிறுவர்கழக இயக்கத்தின் 100-வது ஆண்டு பூர்த்தியையொட்டி விசேட தபால் முத்திரை வெளியிடவிருக்கிறது.

பிலடெல்பியா விளம்பர ஸ்தாபனத்தைச்சேர்ந்த சாள்ஸ் ரி. கொயினர் இந்தத் தபால்முத்திரைப்படத்தை வரைந்துள்ளார். ஒரு சிறுவனது தலையின் ஒருபக்கம் காணக்கூடியதாக முத்திரை வரையப்பட்டுள்ளது. முத்திரையின் இடதுபக்கத்தில் "அமெரிக்க சிறுவர் கழக இயக்கம்" எனும் வாசகம் சொல்வரிசையில் பொறிக்கப்பட்டுள்ளது. இதன்கீழ் 1860—1960என ஆண்டும் பொறிக்கப்பட்டுள்ளது. 4 சென்ற் தபால் முத்திரையாக இது வெளியிடப்படும்.

அமெரிக்காவில் சிறுவர்கழக இயக்கம் 1860-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. அப்பொழுது ஹார்வாட், கொனிக்கற் முதலான இடங்களிலே பொதுச்சேவையில் சிரத்தைகொண்டபெரியார்கள் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் தங்கள் ஓய்வு நேரத்தைச் சிறந்தவழியில் உபயோகப்படுத்தும்பொருட்டு இத்தகைய கழகங்களை ஏற்படுத்தினர். காலகதியில் இந்த இயக்கம் ஏனையஇடங்களில் பரவியதுமட்டுமல்லாது சிறுவர்இயக்கத்தின் முக்கியத்துவத்தையும் விளக்கிற்று.

1906-ம் ஆண்டு ஐம்பதுக்கு அதிகப்பட்ட கழகங்கள் ஒன்றாக இணைந்து இத்தகைய கழகங்களை மேலும் அமைக்கச் சிரத்தையுள்ளவர்களுக்கு உதவ முன்வந்தன. நிதிக் குறைவு ஏற்பட்டுத் தேவையான விளம்பரங்கள் கிட்டாத பொழுதுகூடச் சிறுவர்கழக இயக்கம் துரிதமாக வளர்ச்சியடைந்தது. இன்று அமெரிக்காவில் 50 லட்சம் சிறுவர்களுக்குச் சேவைபுரியும் 540-க்கு அதிகப்பட்ட கழகங்கள் இருக்கின்றன. இவற்றில் 1,400 வளர்ந்தவர்கள் முழுநேரமும், 3,500பேர் இடைநேரத்திலும், 10,000-க்கு அதிகப்பட்டவர்களான சம்பளமின்றிச் சேவை செய்பவர்களும் பணிபுரிகின்றனர்.

இக்கழகங்கள் அனைத்தும் மாலை வேளைகளில் சிறுவர்களுக்கெனத் திறந்துவைக்கப்படுகிறது. இங்கு பொழுதுபோக்கு வசதிகள் மட்டுமல்லாது சிறுவர்களின் தேவைகளுக்கு ஏற்ப ஆலோசனையும் இலவசமாக வழங்கப்படுகிறது. இதனால் பண்பாடு மிகுந்த சூழ்நிலையில் சிறுவர்கள் வளரமுடிகிறது.

— அமெரிக்கசெய்தி

### பாலர் பக்கம்
#### அங்கத்தவர் மனுப்பத்திரம்

பெயர்: ..............................

ஆண் / பெண்: ..............................

பிறந்த திகதி: ..............................

வகுப்பு: ..............................

பாடசாலை: ..............................

வீட்டு விலாசம்: ..............................

விசாரணைப்பங்கு: ..............................

முதல் நன்மை பெற்ற திகதி: ..............................

உறுதிப்பூசுதல் பெற்ற திகதி: ..............................

விண்ணப்பப்பத்திரம் அனுப்புவோர் மூன்று விண்ணப்பப் பத்திரங்களையும் ஒன்றாக வைத்து அனுப்பவேண்டும். தனித்தனி அனுப்புவது ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

### பாலர் பக்கத் தொடர்கதைப் போட்டிமுடிவு

**கற்றன், அர்ச். டொன்பொஸ்கோ கல்லூரி மாணவன் செல்வன் போல் அந்தோனி "சிறுவர் தொடர்கதைப் போட்டி"க்குரிய பரிசைப் பெறுகிறார். அவர் எழுதிய கதை,**

"தயாள உள்ளம்"

**கார்த்திகைமாத முதல்வாரத்திலிருந்து ஆரம்பமாகும்.**

**பரிசு உரிய காலத்தில் அனுப்பிவைக்கப்படும்.**

### உங்களுக்குத் தெரியுமா?

※ இன்னும் ஏழு ஆபிரிக்கநாடுகளுக்குச் சுதந்திரம்அருளப் பிரான்ஸ் வாக்களித்திருப்பதோடு இவ்வருடமுடிவிலே ஆபிரிக்காக்கண்டத்திலுள்ள மக்களில் முக்காற்பங்குக்கு மேற்பட்டவர்களும், அதன்கத்தோலிக்கமக்களில் அரைவாசிப்பங்குக்கு மேற்பட்டவர்களும் அங்குள்ள 25 சுதந்திர நாடுகளில் வசிப்பார்கள் என்பது ... ...

※ பாப்பரசரின் அப்போஸ்தலிக்க ஸ்தானாபதிகளாய்ப் பல்வேறு நாடுகளிலும் இன்று 18 குருசிரேஷ்டர்கள் இருந்துவருகிறார்கள் என்பது ... ...

அப்போஸ்தலிக்கஸ்தானாபதிகளென்றால், ஒருநாட்டிலே அல்லது இரண்டு மூன்று கூட்டு நாடுகளிலே அரசாங்கத்தினிடமாக அல்ல, ஆனால், கத்தோலிக்க அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார்களிடமாயும் அந்தந்த நாட்டு மக்களிடமாயும் பாப்பரசரின் பிரதிநிதிகளாய் இருந்துவரும் குருசிரேஷ்டர்களே. இவர்களுக்கு இராசீய அந்தஸ்துஒன்று நீங்கலாக மற்றப்படி அப்போஸ்தலிக்க ஸ்தானிகர்கள், தூதுவர்களுக்குள்ள சகல அதிகாரங்களும், பதவிகளும் அதேவிதமாகவே இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆசிரியர்களின் ஞானவொடுக்கம்

ஐப்பசிமாதம் 19-ந் திகதி புதன் கிழமை பின்னேரம் தொடக்கம் 23-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை வரைக்கும் மருதமடுத் திருப்பதியில் ஆசிரியர்களுக்கு ஒரு ஞானவொடுக்கம் நடைபெறும்.

இம்முறை கொழும்புத்துறையில் ஞானவொடுக்கம் நடைபெறமாட்டாது.

எனவே, இந்த ஞானவொடுக்கத்தில் பங்குபற்றக்கூடிய ஆசிரியர்கள் எல்லோரும் பங்குபற்றுவார்களென எதிர்பார்க்கிறேன்.

இதில் பங்குபற்றவிருக்கும் ஆசிரியர்கள் கூடியசீக்கிரம் எனக்கு அறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

பிலிப் பொன்னையா சுவாமி,
கத். பாட. பொதுமுகாமைக்காரர்.
யாழ்ப்பாணம் 27-9-60.



தோ. இ. இராசையா அவர்களின்

## 2-ம்வருட மரணஞாபகம்

பிறப்பு: 27-12-1879 இறப்பு: 21-10-1958

இவ்வுலகைவிட்டு மறைந்தும், எமது மனதுகளைவிட்டு அகலாது என்றும்எம் நெஞ்சங்களுடனேயிருக்கும் எங்கள்பிரிய தந்தையாகிய தொம்மைப்பிள்ளை இராயப்பு இராசையாஅவர்கள் இப்பூவுலகை விட்டுமறைந்த இரண்டாம்வருட நினைவுதினம் 21-10-60-இல் பூர்த்தியாகிறது. அன்று காலை 6-30மணிக்கு மாதகல், அர்ச். தொம்மைஅப்போஸ்தலர் ஆலயத்தில் இவரின் ஆன்மஇளைப்பாற்றிக்காக ஓர் துக்கப்பாடற்பூசை நிறைவேறும். இதனைக்கண்ணுறும் வண. குருப்பிரசாதிகளையும், சங். சந்நியாசர், கன்னியாஸ்திரிகளையும், அன்புள்ள கிறிஸ்தவர்களையும் தேவன்இவருக்கு நித்தியஇளைப்பாற்றியை அருளுமாறு மன்றாடும்படி தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.

அரிய தந்தையின்பிரிவால் துயருறும் பிள்ளைகள்:
தொ. இ. பெனடிக்ற்,
தொ. இ. மரியதாசன் இராசரத்தினம்,
மேரிதிரேசா அந்தோனிப்பிள்ளை.

மாதகல்

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

எனக்கு மூக்கில்வந்த வருத்தத்தைச் சுகமாக்கியதற்கும், மாதாவிடம் கேட்ட மன்றாட்டுகள்கிடைத்ததற்கும் சதாசகாய மாதாவிற்கு எங்களின் மனமார்ந்தநன்றி. இன்னும், நாங்கள்கேட்கும் மன்றாட்டுகள் கிடைக்க மாதாவிடம் மன்றாடுகிறோம்.

— இருதயம்.

* * *

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

திருஇருதயநாதரின் இரக்கத்தினாலும், பரி. சதாசகாயமாதா, கோடிஅற்புதரான அர்ச். அந்தோனியார் இவர்களின்வேண்டுதலாலும், நான்கேட்டுக்கொண்ட காரியம் கிடைக்கப்பெற்றேன். நேர்த்திப்படி பிரசுரிக்கத் தவறியதை மன்னிக்கும்படி கோரி இதைப்பிரசுரிக்கிறேன்.

— எஸ். என்.

### NOTICE

M. D. J. Nicholas Appuhamy of the Lanka Musical Works will be at Jaffna for Three Weeks from 6th October 1960, at The Renown Bakery, Small Bazaar, Jaffna, to undertake the Repairing and Tuning of all Musical Instruments, Piano, Organ, Harmonium etc.

Repairing of Type-writers is also undertaken.

M. D. Nicholas Appuhamy,
Bopitiya,
Pamunugama.

### மரண சங்கதி

யாழ்நகரிலே அ. யோ. என்றுபிரஸ்தாபமாக அறியப்பெற்றிருந்து காலஞ்சென்ற பிரபல முதலியாரான திரு. அவுறாம்பிள்ளை யோசேப் அவர்களின் பாரியாரும், யாழ்ப்பாண நகரசபையின் முன்னாள்அங்கத்தவர் திரு. ஏ. ஜே. சுவாம்பிள்ளை, மருதமடுப்பதிப் பரிபாலனரான வண. ஜே. சி. செல்வரட்ணம் சுவாமியார் ஆதியோரின் தாயாருமான திருமதி லூயிசாப்பிள்ளை யோசெவ் சென்ற7-ந்திகதிவெள்ளிக்கிழமை காலஞ்செல்லலாயினரெனும் துயர செய்தியை அறிந்து மனவருந்தமுற்றோம். இவரின் சீரியவாழ்க்கைபற்றிய சிலவிபரங்களை மறுமுறைதரவிருக்கின்றோம்.

R. I. P.

### நன்றித் துதி

ஆதரவற்றோரின் அதிநம்பிக்கையாகிய ஆசாரத்துக்குரிய 12-ம்பத்திநாதபாப்பானவரின் பரிவான வேண்டுதலால் எனது சகோதரியின்விவாகம் விபரிசையாக நடந்தேறியது. இப்பரிசுத்தவாளரை நோக்கித்தொடங்கியநவநாள் முடியுமுன்பே நவமாக ஜெயம்கிடைத்தது. இவரின்நாமம் புகழப்படுவதுடன் கூடியசீக்கிரத்தில் முத்திப்பேறு பெற்றபட்டம் கிடைக்கும்படி வேகமாகப் பிரார்த்திப்போமாக.

சி. ஆகத்தா குணமணி

மாதகல்

* * *

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பரிசுத்த தேவதாயார், அர்ச் அந்தோனியார், அர்ச். மசனட்ஆண்டவர், அர்ச். தெரேசம்மாள் இவர்களது வேண்டுதலினால் எனதுபுதல்வி பிரசவ சத்திரசிகிச்சையிலிருந்து காப்பாற்றப்பட்டா. மேலும், வேறுகருமங்களும் அநுகூலமாயின. மற்றும் எனதுமகனின் நல்லொழுக்கத்திற்காகவும் மன்றாடிவருகிறேன். அதுவும்விரைவில் சித்தியாகுமென நம்புகிறேன். இவர்களின்நாமம் புகழப்படுவதாக. இவர்களுக்கு என்நன்றியறிதலைத் தெரிவித்து, நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன். ஓர்அடியாள்.

மலாயா

* * *

### நன்றித் துதி

பரிசுத்த சதாசகாய மாதாவின் இரக்கத்தாலும், ஆராதிஷ்ட அந்தோனிமுனியோரின் மன்றாட்டாலும் எனது குழந்தைக்கும், மாமிக்கும் நான் கேட்டுக்கொண்டபடி சுகம்கிடைத்தது இன்னும் நல்ல சுகம் கிடைக்கும்படியும், எனக்குள்ள தொல்லைகள் நீங்கும்படியும் பரிசுத்த சதாசகாயமாதாவைக் கெஞ்சி மன்றாடுகிறேன். நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கிறேன். பிரசுர தாமதத்திற்கு மாதாவிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாதாவின் தாசன்

* * *

### நன்றித் துதி

பரி. சதாசகாயமாதாவிடமும், அர்ச். யூதாததேயுவிடமும நான்கேட்ட வேண்டுதலை அடைந்து கொண்டேன். நன்றித்தோத்திரமாக இதனைப் பிரசுரஞ்செய்கின்றேன். அவர்களின் நாமம் புகழப்படுவதாக.

# உலக சஞ்சாரம்

### நவீனமாதிரியான ஞானோபதேசம்

சுமார் ஒருலட்சம்பவுண்செலவிலே பத்துவருடகாலம் வேலைசெய்து நவீனமாதிரியான ஞானோபதேசம் ஒன்று நியூயோர்க்நகரிலுள்ள செண் ஜோண் சாவகலாசாலையால் தயாரிக்கப்பட்டுள்ளது. பால்த்திமோர் ஞானோபதேசபுத்தகத்தின் பல்வேறுபகுதிகளை அடக்கியதாய்ப் பலவர்ணச் சினிமாக் கிலங்களைக்கொண்ட இந்தப்பலவர்ணப் பேசும்படத்தை அன்றுபாப்பரசர் பார்த்தபின் "ஆச்சரியம்விளைக்கும் அதிசயமாற்றம்" என்று வியந்துகூறினார். ஆஸ்திரேலியாவிலுள்ள குஷ்டரோகர் குடியேற்ற தலங்களிலும், ஐக்கியஅமெரிக்க தேசத்திலுள்ள சிறைச்சாலைக் கல்விக்கிளப்புகளிலும், ஆபிரிக்கமிஷன்களிலும் இந்தஞானோபதேசம் சித்திகரமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்சமையம் இது ஸ்பானிய, பிரான்ஸியபாஷைகளில் மொழிபெயர்க்கப்படுகின்றது.

### அறுபதுலட்சம் போலிஷ்காரர் யுத்தத்தில் இறந்தவர்கள்

இரண்டாவது உலகயுத்தத்தில் இறந்த 60,28,000 போலாந்துதேசத்தவர்களில் இராணுவ நடவடிக்கைகளினால் பலபோர்முனைகளிலும் இறந்தவர்கள் தொகை உள்ளபடி 6,44,000 பேர் மாத்திரமே. இவ்விதம் "1939-ம்ஆண்டு முதல் 1945-ம்ஆண்டு ஈறாக அந்தயுத்தம் நிகழ்ந்தகாலத்தில் போலாந்தின் யுத்தநஷ்டங்கள்" எனும்நாமத்துடன் வெளிவந்துள்ள ஒருபுத்தகத்தில் புள்ளிவிபரம் வெளியாகியிருக்கிறது. அவர்களில் மரணதண்டனையாலே கூட்டடைமுகாங்களில் இறந்தவர்கள் 35,77,000பேர். சிறைச்சாலைகளிலும் கூட்டடைமுகாங்களிலும் கொள்ளைநோயாலும், பசிபட்டினியால் களைத்துச்சோர்ந்தும் இறந்தவர்கள் 2,86,000 பேர். கடினவேலைமுதலியவற்றால் இறந்தவர்கள் 5,21,000பேர். யுத்தத்தினால்போலாந்துக்குஏற்பட்டபொருள் நஷ்டம்1,640கோடிபவுண்.

* * *

● "தேர்தலில் வெற்றிபெறுவதற்காக எனதுகொள்கைகளையோ அன்றேல் எனது திருச்சபையையோ நான் கைவிடமாட்டேன்" என்று அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலிலே அமெரிக்க ஜனநாயககட்சியின் அபேட்சகராய் நிற்கும் கத்தோலிக்கரான செனற்றர் ஜோண் கெனடி பிரசித்தமாக அறிவித்துள்ளார். அப்பதவி கிடைத்தபின்னர் தானும் எனது மனச்சாட்சியையோ அன்றேல் நாட்டின்நலனையோ காட்டிக்கொடுப்பதைவிட எனதுபதவியையே இராசினாமாச் செய்யத் தயாராயிருக்கிறேனென்றும் அவர் வாக்களித்துள்ளார்.

● கிழக்குப்பாகிஸ்தானியருள்ளே முதல்மேற்றிராணியாராக மிகவண. தியோட்றோனியஸ காங்குலிசுவாமியார் பரிசுத்தபாப்பரசராலே நியமனஞ் செய்யப் பெற்றிருக்கின்றார். இவர் தக்காநகர் அதிமேற்றிராணியாரின் துணைமேற்றிராணியாராக இருந்துவருவார். இதுவரை இவர் தக்காநகரிலுள்ள நோட்றேடாம்கல்லூரிஅதிபாராகக் கடமையாற்றிவந்தார். இம்மாதம் 7-ந்திகதியன்று இவர் கருதினல்அகஜியானியன்ஆண்டகையாலே மேற்றிராணித்துவஅபிஷேகம் செய்யப்பெற்றுள்ளார்.

"ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."

### மகாராணியார் பாப்பரசரைச் சந்திக்கவிருக்கின்றார்

மாட்சிமைதங்கிய எலிசபேத் மகாராணியார் தமதுநாயகரான எடின்பரோவின் டியூக் கோமகனார் சமேதராய் அடுத்துநிகழும் 1961-ம்ஆண்டு வைகாசிமாதம் 2-ந் திகதியன்று றோமைநகருக்கு அதிகாரபூர்வமாக விஜயஞ்செய்து மூத்தினங்கள் அங்கு தங்கவிருக்கின்றாரென றோமிலிருந்து செய்திகிடைத்திருக்கிறது. ஐந்தாம் ஜோர்ஜ்அரசரும், மேரிஅரசியும் றோமைநகருக்கு அதிகாரபூர்வமாக அப்பொழுது விஜயஞ்செய்தபிறகு ஆட்சிபுரியும் அரசதம்பதிகள் றோமைநகருக்கு விஜயஞ்செய்வது இதுவே முதன்முறையாகும். அப்போது ஜோர்ஜ்அரசதம்பதிகள் வத்திக்கான் மாளிகைசென்று 11-ம்பத்திநாதபாப்பானவரைச் சந்தித்தார்கள். எலிசபேத்மகாராணியாரும் இளவரசியாய் இருந்தபோது 12-ம்பத்திநாதபாப்பானவரைச் சந்தித்திருக்கின்றார்.

### மாஷல் ரிற்றோவின் ...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இன்றார்கள். கோவில்கட்டடங்களுக்குவெளியே திருச்சபைசம்பந்தமான எவ்விதகூட்டங்களும் நடைபெறுவது விலக்கப்பட்டிருக்கின்றது. முதல்நன்மை வகுப்புத்தானும் அதனைப்பெறும் வைபவத்திற்குப்பின் காலைப்போசனத்திற்காக ஒன்றுகூடுவதும் தடுக்கப்பட்டிருக்கிறது. ஒருசில கோவில்கள்மாத்திரம் பாசாங்காகத் திறந்துவைக்கப் பட்டிருக்கின்றன. ஆனால், சமயவழிபாட்டுக்குச் சமூகமளிக்கும் எந்தஒரு அதிகாரியும் பதவிநீக்கம் செய்யப்பெற்றுச் சீவனோபாயத்திற்குத் திண்டாடும்படிவிடப்படுகின்றார்.


இந்தியாவிலிருந்து
நாம் புதிதாக வரவழைத்திருக்கும்

## கத்தோலிக்க புத்தகங்கள்

| | ரு. ச. |
|---|---|
| என் விசுவாசம் | ... 4-00 |
| அதிசயஅன்னை அமலமரி | ... -50 |
| இதுதான் கருத்தடை | ... -75 |
| பாடுகளின் பாதையிலே | ... -80 |
| நம் சேசு | ... -60 |
| நடுத்தீர்வை உலா | ... -25 |
| ஊழியர்களின் மாதா | ... 1-50 |
| வாழவிடுங்கள் | ... -40 |
| தி. மு. க. வழிகாட்டிகள் | ... -35 |
| திராவிட இயக்கங்களும் கத்தோலிக்கமும் | ... -55 |
| சுயபரித்தியாகம் | ... 1-00 |
| ஞான உணர்த்துதல் | ... -60 |
| மறு கிறீஸ்து | ... -45 |
| புதுமை வள்ளல் புனித அந்தோனியார் | ... -60 |
| தவறி விழுவோர்க்கு ஊன்றுகோல் | ... -25 |
| அர்ச் அந்தோனியார் மலர் | ... -35 |
| வாழ்விக்கும் வள்ளல் | ... 2-50 |
| செந்துகில் | ... 1-65 |
| சொற்கடந்த சுந்தரி | ... 2-00 |
| **நாடகங்கள்:** | |
| டோமினிக் சாவியோ | ... -65 |
| சமுதாயத் துரோகி | ... -50 |
| சமாதானம் சௌபாக்கியம் | ... 1-25 |
| உடைபடா முத்திரை | ... -15 |
| மதலேனாளின் ஏக்கம் | ... -50 |
| பலித்த கனவு | ... 1-25 |

மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.


Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, October 13-1960.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org